பக்கங்கள்:-28

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 17 | ஞாயிற்றுக்கிழமை | 31.03.2024 | அதிர்வு 243

## மின்சாரம் தாக்கி முதியவர் மரணம்

(ராமு தனராஜா)

குரங்கிடமிருந்து வாழைத்தோட்டத்தைக் காப்பாற்றத் தொடுக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்குண்டு மின்சாரம் தாக்கியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மடூல்சீமை 06▶

# இந்திய – இலங்கை இரு தரப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து புதுடில்லியில் மீளாய்வு



இந்திய – இலங்கை இடையிலான இரு தரப்புப் பொருளாதார திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான சந்திப்பு புதுடில்லியில் நடைபெற்றது.

இது தொடர்பில் இலங்கை ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய வெளியுறவுச் செயலர் வினய் குவாத்ராவின் அழைப்பின் பேரில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட இலங்கையின் உயர்மட்டக் குழுவின் பங்கேற்புடன் கடந்த வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது சாகல ரத்நாயக்க உள்ளிட்ட குழுவினருக்கு இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிறப்பு வரவேற்பளித்ததுடன், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சாதகமான 06▶

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் இன, மத மோதல் ஏற்படக்கூடும்

## இப்படி எச்சரிக்கின்றார் சம்பிக்க எம்.பி.



**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மீண்டும் இன, மத வேறுபாடுகள் தலைதூக்கலாம் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

**இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,**

**“2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகாரத்தைப் பெறுவதற்காகப் பல்வேறு தரப்பினரும் சமூகத்தைப் பிளவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.** 06▶

# இரு வேறு இடங்களில் ஒரே ரயில் மோதி இருவர் பரிதாப உயிரிழப்பு



கண்டியிலிருந்து கொழும்பு – கோட்டை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலால் இரு வேறு இடங்களில் இருவர் மோதப்பட்டு உயிரிழந்துள்ளனர். இந்தப் பரிதாப சம்பவங்கள் நேற்று இடம்பெற்றுள்ளன.

நேற்றுக் காலை 8.45 மணியளவில், ராகமையிலுள்ள கடவையொன்று மூடப்பட்டிருந்தபோது, 06▶



மனித வாழ்வுக்கும் இருப்புக்கும் மிக முக்கியமான விடயம் சுகாதாரமும் மருத்துவமும்.

நாட்டில் அதிக கவனம் – சிரத்தை – காட்டப்படும் துறையும் இதுதான்.

இலங்கையில் ஊழல், மோசடி, சீர்கேடுகள், குழப்பம் நிறைந்த துறையும் கூட இதுதான்.

ஏற்கனவே இத்துறையின் மருந்துக் கொள்வனவு உட்பட பல விடயங்களில் அதன் பெருமை கொடி கட்டிப் பறக்கின்றது.

டாக்டர்களின் வேதனத்துக்கான பணிநேரத்தைப் பற்றி ஒரு விசாரணை நடத்தினாலேயே பல விடயங்கள் – அதிர்ச்சி தரும் அடிப்படைகள் – அம்பலமாகும் 06▶

# யாழ். வைத்தியசாலையில் 10 மாடிகளில் புதிய கட்டடம்

## வைத்தியசாலை பணிப்பாளர் தகவல்




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 10 மாடிகள் கொண்ட புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தினமும் அதிகளவிலான நோயாளிகள் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை பெற்று வரும் நிலையில் விடுதிகளிலும் அதிகளவானோர் தாங்கி நின்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால், இட நெருக்கடி காரணமாக 10 மாடிகள் கொண்ட புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

புதிய கட்டடத்தை அமைப்பதற்கான வரைபடம் தயாரிக்கப்பட்ட நிலையில் அடுத்த கூட்டத்தில் அதனைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன்.

புதிய கட்டடத்தைக் கட்டுவதற்குப் பாரிய நிதி செலவு செய்ய வேண்டிய சூழ்நிலையில் எமது புலம்பெயர் வர்த்தகரான ராஜ் ராஜரட்ணம் ஒரு தளத்துக்கான முழுமையான செலவை வழங்குவதற்கான சாதகமான பதிலை வழங்கியுள்ள நிலையில் அவரைப் போன்று பலர் உதவி வழங்குவார்கள்.

அரசிடம் புதிய கட்டடத்துக்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு வரிவிலக்கைக் கோரி பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்துரையாடியுள்ளோம்.

ஒரே தடவையில் பத்து மாடிகளையும் கட்டி முடிக்காவிடினும் ஆகக் குறைந்தது ஐந்து தொடக்கம் ஆறு மாடிகளையாவது கட்டி முடித்தால் இட நெருக்கடி குறைந்து விடும்.

ஆகவே, புதிய கட்டடத்துக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்." – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டார்.

# ஈஸ்டர் தினத் தாக்குதலின் மோசமான நினைவுகள் எமது மனங்களில் இருந்து ஒருபோதும் மறையாது!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



"இலங்கை கிறிஸ்தவர்களால் மிகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் கொண்டாடப்படும் ஈஸ்டர் காலம் ஒரு கொடூரமான தீவிரவாத தாக்குதலைக் கண்டிருந்தது. அந்த மோசமான நினைவுகள் எமது மனங்களில் இருந்து ஒருபோதும் மறையாது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள ஈஸ்டர் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் முகமாக ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடுகின்றார்கள்.

இயேசுவின் துன்பம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நினைவுகூரும் 40 நாள் தவக் காலத்தில் கிறிஸ்தவர்கள் மதக் கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

வரலாற்றில் மிக மோசமான பொருளாதாரச் சவாலை எதிர்கொண்ட ஒரு நாடு என்ற வகையில், தாங்கிக்கொள்ளும் இயலுமை நிறைந்த தேசமாக ஆசிர்வாதத்துடன் உயிர்த்தெழ ஆரம்பித்திருக்கின்றோம்.

பல்லின சமூகமாக வாழும் நாடு என்ற வகையில் இலங்கை தற்காலத்தில் எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகொள்வதற்காக ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும். எனவே, இலங்கையர்களாகிய நாம் எமது ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பேணுவதுடன், அதற்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சக்திகளிடமும் சிக்கிக்கொள்ளாமல், அறிவுபூர்வமாக நாட்டின் பாதுகாப்பு, சமாதானம் மற்றும் அபிவிருத்திக்காக அர்ப்பணிக்க வேண்டியது அவசிமாகும்.

இலங்கை கிறிஸ்தவர்களால் மிகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் கொண்டாடப்படும் ஈஸ்டர் காலம் ஒரு கொடூரமான தீவிரவாத தாக்குதலைக் கண்டிருந்தது. அந்த மோசமான நினைவுகள் எமது மனங்களில் இருந்து ஒருபோதும் மறையாது. அதேநேரம் அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு எதிராக சுதந்திரமாகவும் பாரபட்சம் இன்றியும் சட்ட அமுல்படுத்துவதற்கான சூழலை அரசு உருவாக்கியுள்ளதுடன் இனிவரும் நாட்களில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்கும் வகையில் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய அரசு அர்ப்பணிக்கும்.

அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட மற்றும் மகிழ்ச்சியான ஈஸ்டர் நாளாகட்டும் எனப் பிராத்திக்கின்றேன்." – என்றுள்ளது.




# வாசல் கவிதை சஞ்சிகை திருமலையில் வெளியீடு!

(ஏ.எச்.ஹஸ்பர்)

வாசல் வாசகர் வட்டத்தின் வெளியீடான “வாசல்“ கவிதை சஞ்சிகை வெளியீடு நேற்று சனிக்கிழமை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் பொன்.சற்சிவானந்தம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில், தொடக்கவுரை மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பை கவிஞர் க.யோகானந்தம் வழங்கியிருந்தார்.

பிரதம ஆசிரியர் உரையை வாசல் கவிதை சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன் ஆற்றியிருந்தார். “ஈழத்து கவிதை சிற்றிதழ்களின் வரிசையில் வாசல் சஞ்சிகை“ என்ற தலைப்பில் கவிஞர் தி.பவித்ரன் விசேட உரையாற்றினார்.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் “கலைக்கேசரி“ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.












# தந்தை செல்வா ஜெயந்தி தின நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில்

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

தந்தை செல்வாவின் 126ஆவது ஜெயந்தி தின நிகழ்வு நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

செல்வநாயகம் நினைவு அறைக் கட்டளையின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 126ஆவது ஜெயந்தி தின நிகழ்வு நேற்று பிற்பகல் 3 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது.

தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது பிரதம அதிதிகளுக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றது.

பின்னர் "தீர்க்கதரிசி தந்தை செல்வாவின் இலட்சியப் பயணம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதா? செல்லப்பட வில்லையா?" எனும் தலைப்பில் கம்பவாரதி இ.ஜெயராஜ் தலைமையில் சொற்சமர் இடம்பெற்றது.

இதில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது எனும் அணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன், சமூக சேவகர் ந.ஐங்கரன், கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா உள்ளிட்டவர்களும், முன்னெடுத்துச் செல்லப்படவில்லை எனும் அணியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களான எஸ்.தபேதன் செ.ஆராதனன் மற்றும் பி.டிவேஸ் உள்ளிட்டவர்கள் பங்கு பற்றி தமது வாதங்களை முன்வைத்திருந்தனர்.

நிகழ்வில், இந்திய துணைத் தூதராக தூணைத் தூதுவர் சாய் முரளி, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன் மற்றும் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவராக சி.தவராசா, அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.












# களிமண், பித்தளை, பிரம்புப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு விசேட வேலைத்திட்டம்

இத்தாலி, கனடா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குக் களிமண், பித்தளை மற்றும் பிரம்பு தொடர்பான பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான விசேட வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழிற்துறையினரை இணைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை தமது அமைச்சின் தலையீட்டுடன் நடைமுறைப்படுத்தவுள்ளதாகச் சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தொழிற்துறையினருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் சலுகை வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் திட்டமும் முன்னெடுக்கப்படுவதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பலியானோருக்காக கொச்சிக்கடை புனித அந்தோனியாரில் பிரார்த்தனை

பாஸ்கா திருவிழிப்பு தினமான நேற்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் கிறிஸ்தவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இதன்போது வருகைதந்த பக்தர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பலியானவர்களது நினைவுப்படங்களுக்கு முன்னால் நின்று பிரார்த்தனை செய்தனர்.









# ராகம போதனா வைத்தியசாலையில் தடுப்பூசி செலுத்தப்பட்டவர் மரணம்

## விசாரணைகள் ஆரம்பம்

ராகம போதனா வைத்தியசாலையில் தடுப்பூசி செலுத்தப்பட்ட நிலையில் நோயாளி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை மட்டத்திலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என ராகம போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சம்பத் ரணவீர தெரிவித்துள்ளார்.

கோ அமோக்சிக்லாவ் எனும் தடுப்பூசியைச் செலுத்தியதன் பின்னர் மேற்படி நோயாளி உயிரிழந்தார்.

எனினும் தடுப்பூசியினால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக அந்த மரணம் ஏற்பட்டதா என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

உயிரிழந்தவர் 50 வயதுடையவர் எனவும், காது தொடர்பான சுகயீனம் காரணமாக கடந்த 22 ஆம் திகதி ராகம போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூக ஊடகத் தளங்களில் அதிகரிப்பு

சமூக ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன என பொலிஸ் கணினிக் குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சமூக ஊடகங்கள் ஊடாக இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் 1500 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் கணினிக் குற்றப்பிரிவு கூறியுள்ளது.

இவற்றில் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களே அதிகளவில் பதிவாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேஸ்புக் ஊடாக இடம்பெறும் மோசடிகளும் அதிகரித்துள்ளன எனப் பொலிஸ் கணினி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் 3 மாதங்களுடன் ஒப்பிடுகையில், இணையத்தளம் ஊடான மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளில் சற்று அதிகரிப்பு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) என்கிறார் ஒரு மருத்துவ ஊழியர்.

அந்த உயிர் காக்கும் துறையில் பணி புரிவோர் வேலை நிறுத்த அச்சுறுத்தலை காட்டி நடத்தும் திருகுதாளம் ஆண்டவனுக்கே அடுக்காது. கேட்டால் தொழிற் சங்க உரிமை என்பார்கள். இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் அதுவே மக்களின் உயிரோடு விளையாடும் வினையாகவும் இருக்கின்றது.

தமது பணி – இல்லை, சேவை – தெய்வீகத் தொழில் என்பார்கள். கூட்டமாக வேலை நிறுத்தத்தில் குதிக்கும் போது அந்த தெய்வீகம் எங்கே போய்விடுமோ தெரியவில்லை.

அந்தத் துறையில் ஓர் அதிர்ச்சி தரும் விடயம் பற்றிய தகவல் இன்று.

அதுவும் நாட்டின் மிகப் பிரதான வைத்தியசாலையான தலைநகர் கொழும்பின் தேசிய வைத்தியசாலை பற்றிய செய்தி இது:–

கடந்த இருபது வருடங்களாக வைத்தியசாலையின் பிரதான நீர் தாங்கிக் கோபுரம் மற்றும் ஏனைய நீர் சேமிப்புத் தொட்டிகள் சுத்தப்படுத்தப்படவேயில்லை என்று கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ருக்ஷான் பெல்லான குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டிருக்கின்றார்.

கொழும்பு வைத்தியசாலையில் தற்போது பிரதான நீர் தாங்கி கோபுரம் உட்பட சுமார் 161 நீர் சேமிப்பு தொட்டிகள் உள்ளன என அவர் கூறுகின்றார்.

ஆச்சரியப்படும் விதமாக, இந்த தொட்டிகளைச் சுத்தம் செய்யும் அட்டவணை அல்லது அவை அமைக்கப்பட்ட திகதிகளை ஆவணப்படுத்தும் பதிவுகள் எதுவும் இல்லை என்கிறார் அவர்.

நிலையான நெறிமுறைகளின்படி, தண்ணீர் சேமிப்புத் தொட்டிகளை மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது சுத்தம் செய்ய வேண்டும் என்று டாக்டர் பெல்லானா கூறினார்.

ஆனால், கடந்த 20 ஆண்டுகளாக இந்தத் தொட்டிகள் சுத்தம் செய்யப்படாமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது என்றார் அவர்.

மருத்துவமனையின் சுகாதாரப் பரிசோதகர்கள் தண்ணீர் சுத்தத்தில் கவனம் செலுத்தாதமை குறித்து டாக்டர் பெல்லானா கவலை தெரிவித்தார்.

பாக்டீரியா அளவுகளைச் சரிபார்க்க ஆண்டுதோறும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (எம்.ஆர்.ஐ.) வழக்கமான நீர் மாதிரிகள் அனுப்பப்படுகின்றன. ஆனால், அந்த நடவடிக்கை மட்டும் நீரின் தூய்மைக்கு உத்தரவாதம் அளிக்காது என்று அவர் கூறினார்.

தண்ணீரில் தீங்கு விளைவிக்கும் அசுத்தங்கள் இருக்கக்கூடும், இது நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு ஒரே மாதிரியாக ஆபத்தை ஏற்படுத்துகிறது.

இந்த நீர்தான் நோயாளிகளின் பாவனை மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகள் மற்றும் ஆய்வகங்களில் உணர்திறன் வாய்ந்த உபகரணங்களால் பயன்படுத்தப்படுகிறது. இது, உபகரணங்களின் சேதத்திற்கு வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், சுத்திகரிக்கப்படாத சேமிப்பு தொட்டிகளில் இருந்து நீரைப் பயன்படுத்துவது பொது சுகாதார அபாயங்கள் மற்றும் உணர்திறன் வாய்ந்த உபகரணங்களுக்கு அச்சுறுத்தல் ஆகிய இரண்டையும் ஏற்படுத்துகிறது என்றார் அவர்.

இதுதான் நமது நாட்டின் சுகாதாரத் துறையின் சீத்துவம்...!

## இந்திய - இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிலைக்குத் திரும்பி வருவதால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மூலோபாய பொருளாதார வேலைத் திட்டத்தின் கீழ் இணக்கம் காணப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தும் இயலுமை இரு நாடுகளுக்கும் உள்ளது எனவும் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்திய அரசு வழங்கிய ஆதரவுக்கு நன்றி கூறிய சாகல ரத்நாயக்க, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தில் இலங்கையின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த, துரித முன்னேற்றம் அடைய வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, அதற்காக இந்தியாவுடன் தற்போதுள்ள பொருளாதார ஒத்துழைப்பையும் பலப்படுத்த வேண்டிய தன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இதன்போது இந்திய – இலங்கை வரலாற்றுத் தொடர்புகளை நினைவுகூர்ந்த சாகல ரத்நாயக்க, இலங்கையின் அயல் நாடான இந்தியாவுடனான வலுவான தொடர்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு திட்டங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவது குறித்து இரு தரப்பும் கவனம் செலுத்தியதுடன், ஒவ்வொரு காலாண்டிலும் அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. – என்றுள்ளது.





## ஜனாதிபதித் தேர்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முஸ்லிம் மற்றும் சிங்கள இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தவும், பௌத்த – இஸ்லாமிய அடிப்படையில் மோதலை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது இன, மதப் பிளவுகளை கட்டுப்படுத்தும் பொறுப்பு தற்போதைய ஜனாதிபதிக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் உள்ளது." – என்றார்.

## மின்சாரம் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எக்கிரிய பகுதியில் மேற்படி முதியவர் தனது வீட்டுத் தோட்டத்தில் வாழை மரத்தில் உள்ள வாழைக்குலையைக் குரங்கிடமிருந்து காப்பாற்ற வாழை மரம் அருகில் அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியைக் கழற்ற முற்பட்டபோது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே சாவடைந்தார்.

எக்கிரிய பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார்.

சடலம் மீகாகியூல வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரு வேறு இடங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கடவையைக் கடக்க முற்பட்ட இளைஞன் ஒருவர் ரயிலால் மோதப்பட்டு உயிரிழந்துள்ளார்.

ராகமை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தையடுத்து அந்த ரயில் மீண்டும் கொழும்பு – கோட்டை நோக்கி அதன் பயணத்தைத் தொடர்ந்துள்ளது.

இந்நிலையில், ராகமை – துடுவேகெதர பகுதியில் வைத்து அதே ரயிலால மற்றுமொரு நபர் மோதப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் சிக்கி 50 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலுக்காக1,000 கோடி ரூபா நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தகவல்

ஜனாதிபதி தேர்தலுக்காக ஏற்கனவே 1,000 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீரத் நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த வருட இறுதிக்குள் கட்டாயம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலுக்கான எழுது கருவி பொருள்களைக் கொள்வனவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழுவின்



பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் ஒழிப்பு ஆலோசகர்களாக பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பயிற்சி!

பல்கலைக்கழக மாணவர்களை போதைப்பொருள் ஒழிப்பு ஆலோசகர்களாக, பயிற்றுவிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

யுக்திய சுற்றிவளைப்பு திட்டத்திற்கு அமைவாக, இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொஹொலன்கே தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் இருந்து 200 மாணவர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர் எனவும், இந்தத்தி ட்டத்தை பாடசாலை மட்டத்திலும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, யுக்திய சுற்றிவளைப்பிற்கு இணையாக போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை தொடர்பில் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் எதிர்வரும் 02 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

போதைப்பொருள் தடுப்பு பயிற்சியை பெற்றுக்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்களை பாடசாலை மட்ட ஆலோசகர்களாக நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் 400 மாணவர்களுக்கு இதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உதவொ பணிப்பாளர் பிரதீப் கொஹொலன்கே தெரிவித்துள்ளார்.

# மஹிந்த அமரவீர, லசந்த, துமிந்த ஆகியோர் சு.க. வில் வகித்த பதவிகளில் இருந்து நீக்கம்



மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண மற்றும் துமிந்த திசாநாயக்க ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இதுவரை வகித்த பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அதற்காக கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூட்டம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுக்கான மாநாட்டின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு கட்சியின் தவிசாளர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

அதற்கமைய, துமிந்த திசாநாயக்க இதுவரை வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவி மஹியங்கனை தொகுதி அமைப்பாளர் கே.பி குணவர்தனவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் லசந்த அழகியவண்ண இதுவரை வகித்த கட்சியின் பொருளாளர் பதவிக்கு ஹெக்டர் பெத்மகே நியமிக்கப்பட்டுள்ளார்.

மஹிந்த அமரவீர இதுவரை வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் பதவிக்கு சரத் ஏக்க நாயக்க தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புதிய வழியில் சஜித்

ஒரு நாட்டின் உண்மையான பலம் - வலிமை - யாது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வெளிப்படையாகவே தெரிவித்திருக்கின்றார்.

அது புரியாமல் - அல்லது புரிந்தும் அந்த யதார்த்தப் புற உண்மையைப் புறமொதுக்கியும் - நமது நாடும், தலைவர்களும், மக்களும் நடந்து கொண்டமையினால்தான் நாட்டுக்கு இந்தப் பேரவல நிலைமை.

பௌதீகப் பாதுகாப்பில் மட்டுமல்ல, பொருளாதார - சமூக - கலாசாரத் துறைகள் ஒவ்வொன்றிலும் நாடு வளமிழந்து, பலம் குன்றி, துவண்டு போய்க் கிடப்பதற்கு இதுதான் காரணம். இதுவேதான் - இது மட்டுமேதான் - முழு முதல் காரணம்.

"எமது நாட்டில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், நட்புறவு, இனசௌஜன்யம் என்றென்றும் பேணப்பட வேண்டும். நாட்டுக்கு இதுவே பக்க பலம். அந்தந்த மதங்களுக்குரிய மரியாதை வழங்கப்பட வேண்டும். பன்முகத்தன்மையைப் பாராட்ட வேண்டும். பன்முகத்தன்மையில் உருவாகும் ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும், - கலாசார விழுமியத்துக்கும் உரிய மரியாதையும் கௌரவமும் அளிக்கப்பட வேண்டும்" - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையிலான அடையாளங்களைப் பாதுகாக்க வேண்டும். மத சுதந்திரத்திற்கான உரிமையைப் பாதுகாக்க வேண்டும். சுதந்திர நாட்டில் நாங்களும் நீங்களும் நம்பும், பின்பற்றும் மதத்தைப் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல ஒன்றிணையுமாறும் அவர் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

அவர் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு கொழும்பு வெள்ளவத்தை மெரைன் கிறேண்ட் வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்படி விடயத்தை அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எதிர்க்கட்சித் தலைவராக அந்த விடயத்தை - உண்மையை - அவர் சுட்டிக் காட்டுவது இலங்கை அரசியலில் புதுமையான அம்சம் தான்.

பௌத்த - சிங்கள பேரினவாத வெறியைத் தூண்டி, அந்த மேலாண்மைத் திமிரில் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றும் அரசியல் குரூரத்தனமும், குரோதப் போக்குமே இலங்கை அரசியலில் கடந்த 75 ஆண்டுகளாக நிறைந்து கிடக்கின்றன.

சிறுபான்மையினரின் மதங்களை - மொழிகளை - ஏன் இனத்துவ இருப்புகளையே - இல்லாது அழித்தொழிக்கும் பேரினவாதத்தையே, அதன் ஆக்கிரமிப்பையே தமது கொள்கைப் போக்காகக் காட்டி, கடைப்பிடித்து, அதன் வழியில் அடக்குமுறையை ஏவி விடுவதே நாட்டில் அதிகாரத்தைக் கைப்பற்றவும், தக்க வைக்கவும் வாய்ப்பான - மிக இலகுவான - வழி என்று கண்ட பேரின அரசியல் தலைவர்கள் அதையே சுதந்திர இலங்கையின் பிரதான அரசியல் செல்நெறியாக வகுத்துக் கொண்டனர்.

பேரினவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதில் யார் பெரியவர் என்ற போட்டிதான் அரசியல் அதிகாரத்தை தக்க வைக்கும் மையப் பொருளாக இருந்து வந்திருக்கின்றது - கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் வரையும் கூட.

பெரும்பான்மை மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து, அதையே வாக்கு வங்கி அறுவடைக்கான வாய்ப்பான - சுலபமான - தந்திரோபாயமாக தென்னிலங்கைத் தலைவர்கள் கையாண்டு வந்துள்ளனர்.

அந்த அடக்குமுறையின் விளைவாகவே இந்த நாட்டில் மூன்று தசாப்த காலம் இன யுத்தம் மோசமாக நடந்தேறியது. இரத்த ஆறு ஓடியது. பெரும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்குப் பொருந்தாத கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள், பேரழிவுகள் என்பன தாராளமாகக் கட்டவிழ்ந்தன.

இந்த நாடு பாதுகாப்பு ரீதியில் மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியிலும் வக்கற்ற - வகையற்ற - கீழ்மைநாடு என்ற மோசக் கட்டத்தை அடைவதற்கு பேரினவாதத்தின் மத, மொழி ரீதியான அடக்கு முறையும் ஆக்கிரமிப்புப் போக்கும், மேலாண்மை எதேச்சாதிகாரமும், பேரின வெறி நடத்தையுமே காரணங்கள்.

தென்னிலங்கைச் சிங்களத்தின் மூளைமையத்தைக் கவ்விப் பிடித்திருக்கும் இந்த மேலாதிக்கத் திமிர்ச் சிந்தனைப் போக்கு தனித்துவமான தேசியங்களுக்கு இடையிலான ஒற்றுமைக்கோ - மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கோ - சமூகங்களுக்கு இடையிலான நட்புறவுக்கோ - இனங்களுக்கு இடையிலான சௌஜன்யத்துக்கோ இடமளிக்கவில்லை. அடக்குமுறையும், அதற்கான கொடூர அணுகுமுறையும் தான் ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் தெற்கின் ஒரே சுபாவமாக - நடத்தையாக - இன்றளவும் இருந்து வருகின்றது.

எதிர்க்கட்சியில் இருந்தபடி ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக பேரினவாதத்தை பெரும் எடுப்பில் கிளப்பிய முன்னைய சிங்களத் தலைவர்களில் இருந்து இவ்விடயத்தில் சஜித் பிரேமதாஸ வேறுபடுகின்றார் என்பதை அவரது இப்தார் நிகழ்வு உரை தெளிவுபடுத்துகிறது.






# ஹமாஸ் கிளர்ச்சியாளர்களுடன் மீண்டும் சமாதான பேச்சுக்கு இஸ்ரேல் இணக்கம்

ஹமாஸ் கிளர்ச்சியாளர்களுடன் மீண்டும் சமாதான பேச்சுவார்த்தையை முன்னெடுக்க இஸ்ரேல் இணக்கம் தெரிவித்துள்ளது.

டோஹா மற்றும் கெய்ரோ நகரங்களில் இந்த கலந்துரையாடலை நடத்த இஸ்ரேல் பிரதமர் அனுமதி வழங்கியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த கலந்துரையாடலில் கட்டார் மத்தியஸ்தம் வகிக்கின்றது.

காஸா எல்லையில் போர் நிறுத்தத்தை அறிவித்தல் மற்றும் பணயக் கைதிகளை விடுவித்தல் என்பன இந்த கலந்துரையாடலின் பிரதான நோக்கமாக உள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் கடந்த வாரத்தில் நிலையான போர் நிறுத்தத்திற்கான கோரிக்கையை மீண்டும் முன்வைத்திருந்தனர். எனினும், இந்த கோரிக்கையை இஸ்ரேல் நிராகரித்திருந்தது.

எவ்வாறாயினும், இந்த பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கு இஸ்ரேல் தற்போது தயாராகியுள்ளது. ஹமாஸ் அமைப்பினர் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சூடானில் பட்டினிச்சாவை மக்கள் எதிர்கொண்டுள்ளனர்

## 5 மில்லியன் பேர் பாதிப்பு





சூடானில் பட்டினியால் மக்கள் உயிரிழக்கும் அபாயம் அதிகரித்துள்ளதால், உடனடி உதவிகள் அவசியமென ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இராணுவம் மற்றும் துணை இராணுவ குழுக்களுக்கிடையே ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் காரணமாக உணவுப் பொருள்களின் விநியோகம் தடைப்பட்டமையே இதற்கு காரணமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுடானில் சுமார் 5 மில்லியன் மக்கள் பட்டினியை எதிர்கொண்டுள்ளனர் என ஐ.நா அறிக்கை வெளியிட்டுள்ளது.

அவர்கள் போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் 3.6 மில்லியன் பேர் சிறுவர்கள் எனவும் 1.2 மில்லியன் பேர் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளே பட்டினியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் 8 மில்லியன் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், சூடானில் எதிர்வரும் மாதங்களில் பட்டினி நிலை மேலும் அதிகரிக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரு நாளில் வீணாகும் உணவைக் கொண்டு 100 கோடி மக்களின் பசியைத் தீர்க்கலாம்

வீடுகளில் ஒரு நாளில் வீணாகும் உணவைக் கொண்டு 100 கோடி மக்களின் பசியைத் தீர்க்கலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய உணவு விரயம் தொடர்பான அறிக்கையை ஐ.நா வெளியிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 5 இல் 1 பங்கு அளவில் உணவு விரயமானதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் 63 கோடி தொன், உணவகங்களில் 29 கோடி தொன், சில்லறை கடைகளில் 13 கோடி தொன் என உலக அளவில் 105 கோடி தொன் உணவு விரயம் செய்யப்படுகிறது.

வீடுகளில் ஒரு நாளைக்கு 100 கோடி தொன் உணவுகள் வீணாக்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, உலக அளவில் வீடுகளில் ஒரு நாள் வீணாகும் உணவைக் கொண்டு 100 கோடி மக்களின் பசியைத் தீர்க்க முடியும். குறிப்பாக, அதிக வெப்ப நிலை நிலவும் நாடுகளில் உள்ள வீடுகளில் தனிநபர் உணவு விரயம் அதிகமாக உள்ளது.

அதிக வெப்ப நிலையால், உணவை சேமித்து வைப்பது அங்கு சவாலாக உள்ளதால் விரயம் அதிகம் நிகழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# முதல்வர் ஸ்டாலின் உடன் நடிகர் கமல்ஹாசன் சந்திப்பு



மக்களவைத் தேர்தலுக்காக தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபட சேலம் சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினை, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சேலம் மக்களவை தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் டி.எம்.செல்வகணபதியை ஆதரித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட முதல்வர் ஸ்டாலின் சேலம் சென்றுள்ளார். சேலம் பெங்களூர் வீதியில் உள்ள தனியார் விடுதியில் முதல்வர் ஸ்டாலின் தங்கியிருந்தார்.

ஈரோடு மக்களவை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசனும், சேலத்தில் முகாமிட்டபடி பிரச்சார பயணத்தை தொடங்கியுள்ளார்.


இந்த நிலையில், முதல்வர் ஸ்டாலின் தங்கியுள்ள விடுதிக்கு ம.நீ.ம. தலைவர் கமலஹாசன் நேரில் சென்று அவரை சந்தித்து, அரை மணி நேரம் உரையாடியுள்ளார். தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து ம.நீ.ம. தலைவர் மேற்கொண்டுள்ள தேர்தல் பிரச்சாரம் குறித்தும், மக்களிடையே கிடைக்கப்பெற்ற வரவேற்பு குறித்தும், வெற்றி வாய்ப்புக்கான சூழல் குறித்தும் முதல்வர் ஸ்டாலினுடன் கலந்துரையாடியுள்ளார்

ம.நீ.ம. தலைவர் கமலஹாசன் தி.மு.க கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், அவரது கட்சி தேர்தலில் போட்டியிடவில்லை என்றாலும், தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் தேர்தல் பரப்புரை மேற்கொண்டுள்ளார்.

ம.நீ.ம. தலைவர் கமலஹாசன் சேலத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், முதல்வர் ஸ்டாலின் தேர்தல் பிரச்சார கூட்டம் சேலத்தில் நடப்பதால், அவர் தனது பிரச்சார நிகழ்ச்சிகளை ரத்து செய்துள்ளார்.

# விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு பானை, ம.தி.மு.கவுக்கு தீப்பெட்டி சின்னம் ஒதுக்கீடு



மக்களவைத் தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு பானை சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சி தொகுதியில் போட்டியிடும் ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோவுக்கு தீப்பெட்டி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கட்சித் தலைவர் திருமாவளவன் சிதம்பரம் தொகுதியிலும், பொதுச் செயலாளர் துரை.ரவிக்குமார் விழுப்புரம் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

இதுதவிர கர்நாடகா, ஆந்திரா, கேரளா, தெலுங்கானா, மகாராஷ்டிரா மாநிலங்களிலும் வி.சி.க. போட்டியிடுகிறது. எனவே, இந்தத் தேர்தலில் தங்களுக்கு பானை சின்னத்தை, பொதுவான சின்னமாக ஒதுக்கக் கோரி தேர்தல் ஆணையத்தில் வி.சி.க. சார்பில் மனு அளிக்கப்பட்டது. ஆனால் ஒரு சதவீதத்துக்கும் குறைவாக வாக்கு பெற்றதாகக் கூறி, வி.சி.கவின் கோரிக்கையை ஏற்க தேர்தல் ஆணையம் மறுத்தது.

இதை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றத்தில் வி.சி.க. தொடர்ந்த வழக்கில், கடந்த தேர்தல்களில் ஒரு சதவீதத்துக்கு அதிகமாக வாக்குகள் பெற்றது தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதையடுத்து, வி.சி.கவுக்கு பொது சின்னம் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக தேர்தல் ஆணையம் உரிய முடிவு எடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. பின்னர், பொது சின்னம் கோரும் விண்ணப்பத்துடன், கட்சியின் நிதியாண்டு கணக்கை தாக்கல் செய்யவில்லை என்று கூறி, பானை சின்னத்தை ஒதுக்க தேர்தல் ஆணையம் மறுத்துவிட்டது.

இதை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றத்தில் வி.சி.க. மேல்முறையீடு செய்துள்ளது.

வி.சி.க. கட்சித் தலைவர் திருமாவளவன் நேற்று முன்தினம் தனது சமூக வலைதள பக்கங்களில் ஒரு பதிவை வெளியிட்டார். அதில், கூட்டணிக் கட்சியினர் வி.சி.கவுக்கு பானை சின்னத்தில் வாக்கு சேகரிக்கும் வீடியோ பதிவை அவர் பகிர்ந்திருந்தார்.

அத்துடன், 2024 மக்களவைத் தேர்தலில் நமது சின்னம் ஹபானை". இந்தச் சின்னம் நமது உரிமை. இந்த சின்னம் கிடைக்கும் என்பதில் மிக உறுதியாய் நிற்கிறோம்" என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில்தான் சிதம்பரம் தொகுதியில் போட்டியிடும் திருமாவளவனுக்கு பானை சின்னத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் ஆனி மேரி ஸ்வர்ணா ஒதுக்கீடு செய்துள்ளார். அதேபோல் விழுப்புரம் தொகுதியில் போட்டியிடும் ரவிக்குமாருக்கும் பானை சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தி.மு.க. கூட்டணியில் திருச்சி தொகுதியில் ம.தி.மு.க. சார்பில் வைகோ மகன் துரை வைகோ போட்டியிடுகிறார். இவருக்கு பம்பரம் சின்னம் மறுக்கப்பட்ட நிலையில், தீப்பெட்டி சின்னம் வேண்டும் என்று கேட்டிருந்தார். அதன்படி, அவருக்கு தீப்பெட்டி சின்னத்தை ஒதுக்கீடு செய்து திருச்சி மாவட்ட தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.



# ரணிலுக்காகக் கொடி பிடிக்கும் தமிழ்த் தரப்புக்கள்!



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எப்படியாவது வெற்றி வேட்பாளராக மாறிவிட வேண்டும் என்ற ஒன்றை நிலைப்பாட்டில் செயற்பட்டு வருகிறார். இதுவரை, அவரின் ஐக்கிய தேசியக் கட்சி தவிர பிரதான கட்சிகள் எதுவும் அவரை ஆதரிப்பதாக வெளிப்படையாக அறிவிக்கவில்லை. வடக்கில் இருந்து சி.வி. விக்னேஸ்வரன், ஜனாதிபதி வேட்பாளர்களில் ரணில் சிறந்தவர் எனும் தொனிப்பட கருத்துக் கூறி வருகிறார். அவர், ஏற்கனவே ரணிலுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களித்தவர். கிழக்கில் இருந்து விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்), அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிக்கப்போகிறார் எனத்தெரிவித்திருக்கிறார்.

ராஜபக்ஷக்களின் ஆதரவின்றி ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர் என்ற கட்டத்தைக்கூட எட்ட முடியாது என்பது ரணிலுக்கு தெளிவாகத் தெரியும். அவர், ஜனாதிபதியாக ராஜபக்ஷக்களின் ஆசியோடு வந்த சில காலத்துக்குள்ளேயே ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவை இரண்டாக உடைத்துத் தன்னைப் பலப்படுத்துவது சார்ந்து இயங்கினார். எனினும் வாக்குப் பலம் பொருந்திய முக்கிய தலைவர்களை அவரினால் பெரியளவில் தன்னோடு இணைத்துக் கொள்ள முடியவில்லை. கம்பஹா மாவட்டத்தில் வாக்குப் பலத்தில் முதன்மை இடத்தில் இருக்கும் பிரசன்ன ரணதுங்க தவிர்ந்து ரணில் பக்கத்தில் இருப்பவர்களும், இணைய ஆர்வத்தோடு இருந்தவர்களும் மூன்றாம், நான்காம் கட்ட வாக்குச் சேகரிப்பாளர்கள் மட்டுமே. அதாவது, பெரமுன கட்சியின் சவாரி செய்து வெற்றி பெற்றவர்கள். அவர்களினால் தனித்து தங்களுக்காக பெரியளவில் வாக்குகளைச் சேர்க்க முடியாதவர்கள். இதனால், பெரமுனவை உடைக்கும் ரணிலின் முயற்சி பிசுபிசுத்தது.

இலங்கை அரசியலில் நிறைவேற்று அதிகாரம் பொருந்திய பதவிக்கு வந்தர்கள் அனைவரும் எதிர்க்கட்சிகளையும், ஆதரவுக் கட்சிகளையும் உடைத்து தங்களைப் பலப்படுத்தி வந்திருக்கிறார்கள். அதில் தோல்வியடைந்தவராக மைத்திரிபால சிறிசேனவைக் கூறலாம். ஏனெனில், அவர் ஜனாதிபதியானதும் சுதந்திரக் கட்சியை மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து கைப்பற்றினாலும், ஆதரவு பலத்தை அவரினால் கைப்பற்ற முடியவில்லை. மாறாக, சுதந்திரக் கட்சியை பெரமுனவிடம் இழக்கும் நிலைக்கு கொண்டு சென்றார். இன்றைக்கு பெரமுனவில் சவாரி செய்யும் உதிரிக்கட்சி மாதிரியாக சுதந்திரக் கட்சி மாறிவிட்டது.

ஏற்கனவே, மைத்திரியிடம் கற்ற பாடத்தை அடுத்து ரணில் ஜனாதிபதியானதும் ராஜபக்ஷக்கள் பெரமுனவை பாரிய பிளவுகள் இன்றி தக்க வைக்கும் முயற்சிகளில் கவனமாக இருந்தார்கள். ராஜபக்ஷக்களின் ஆதரவோடு ஜனாதிபதியானாலும் ஆட்சியை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் ரணில் கவனமாக இருந்தார். குறிப்பாக, ஆட்சியில் ராஜபக்ஷக்களின் தலையீடுகளுக்கு சிறிதளவும் இடமளிக்கவில்லை. பெரமுனவின் பெயரில் ராஜபக்ஷக்கள் ரணிலுக்கு அவ்வப்போது அழுத்தங்களை வழங்கியும் வந்திருக்கிறார்கள். தங்களின் நெருங்கிய சகாக்களை எப்படியாவது அமைச்சரவைக்குள் நுழைத்துவிட அவர்கள் முயற்சித்தார்கள். ஆனாலும் அவற்றையெல்லாம் ரணில் கண்டுகொள்ளவில்லை. மாறாக, தன்னைப் பலம்பொருந்திய தலைவராக அவர் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் காண்பிக்க முயன்றார். ஆனால், வாக்கு அரசியல் கோலோச்சும் இலங்கையில், தேர்தல்களை வெற்றி கொள்ளும் வல்லமையில்லை என்றால், அவர் எவ்வளவு பெரிய தலைவராக இருந்தாலும் செல்லாக்காசாகிவிடுவார். ரணில் இன்று எதிர் நோக்குவதும் அவ்வாறானதொரு நிலைதான். ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல்கள் இரண்டில் போட்டியிட்டு சந்திரிகா குமாரதுங்கவிடம் மஹிந்தவிடமும் ரணில் தோல்வி கண்டிருக்கிறார். அப்படியான நிலையில், அவர் எப்படியாவது நேரடியாக ஜனாதிபதித் தேர்தலில் வென்ற தலைவராகி, அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும் என்ற ஆசையோடு இருக்கிறார். அதற்கு அவருக்காக வாக்குச் சேகரிக்கக்கூடிய தரப்புக்களையெல்லாம் அவர் சிறிய குழுக்களில் இருந்து பெரும் கட்சிகள் வரையில் உறுதிப்படுத்த நினைக்கிறார்.

தொடர்ச்சி ▼

# ரணிலுக்காகக் கொடி பிடிக்கும் தமிழ்த் தரப்புக்கள்!

தொடர்ச்சி ▲

இன்றைய நிலையில் தென் இலங்கையில் ரணில் ஜனாதிபதியாக போட்டியிட்டால் அவர் மூன்றாவது இடத்திற்குத்தான் வருவார். அதுவும், சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திசாநாயக்கவுக்கு இடையில்தான் போட்டியே இருக்கும். ரணில் மிகப்பெரிய பின்னடைவோடு மூன்றாவது இடத்திற்கு வருவார். இதுதான், கள யதார்த்தம். இந்த நிலையை மாற்றுவது என்றாலே ரணிலுக்கு ராஜபக்ஷக்களின் ஆதரவு அவசியம். ஆனால், இந்த



யதார்த்தத்தை மறந்து நின்று சில தரப்புக்கள் ரணில்தான் வெற்றிபெறக் கூடிய வேட்பாளர் எனும் தொனியில் பேசி வருகின்றன. அதில், சில தமிழ்த் தரப்புக்களும் இருக்கின்றன என்பதுதான் நகைப்புக்குரிய விடயமாகும். அந்தத் தரப்புக்களின் வாதம் என்னவென்றால், தோல்வியடைந்த நாட்டை முன்னோக்கி நகர்த்தியிருப்பதன் மூலம் ரணில் தென் இலங்கையில் ஆதரவைப் பெற்றிருக்கிறார். அப்படியான நிலையில், அவரை விட்டுவிட்டு இன்னொரு ஜனாதிபதி வேட்பாளரை தமிழ் – முஸ்லிம் மக்கள் தெரிவாகக் கொள்வது என்பது அபத்தமானது என்பதாகும். ரணில் இலங்கை அரசியலில் பிரதான தலைவர்களில் ஒருவர். அவர் கடந்த அரைநூற்றாண்டு காலத்துக்கும் மேலாக நாடாளுமன்ற அரசியலில் இருப்பவர். ஆனால், அப்படிப்பட்டவர் கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடியாமல் போனது. அதிலும் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அவரினாலும் ஐக்கிய தேசியக் கட்சியினாலும் ஓர் ஆசனத்தைக்கூட நேரடியாக வெற்றிபெற முடியவில்லை. அது ஏன் என்று ஆராய்ந்தாலே கட்சி அரசியலுக்கான ஆதரவுத்தளத்தின் அவசியத்தை உணர்ந்து கொள்ள முடியும். ராஜபக்ஷக்களின் ஆட்சித் தோல்வியில் சில காய்களை வெட்டி ரணில் ஜனாதிபதியாகிவிட்டார் என்பது உண்மைதான். அதற்காக, நேரடி வாக்களிப்பின் மூலமான தேர்தலொன்றில் வெற்றிபெறக்கூடிய நிலையில் இருக்கிறார் என்று கருத்துருவாக்கம் செய்ய முயல்வதை எப்படி எடுத்துக் கொள்வது?

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும், அரசியல் ஆய்வாளர்கள் என்று தங்களை முன்னிறுத்தும் சிலரும் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்ற விடயத்தை முன்கொண்டு வந்தார்கள். இந்த விடயத்தை அடுத்து கட்டத்துக்கு நகர்த்துவதற்காக திடீரென யாழ்ப்பாணத்தில் இருந்து சிலர் மனுக்களைத் தூக்கிக் கொண்டு சில அரசியல் தலைவர்களை தேடிச் சென்று கொண்டிருக்கின்றனர். தங்களை சிவில் குழுவினர் என்றும் அடையாளர்படுத்துகின்றனர். அரசியல் கட்சிகளிலும், ஆய்வாளர்களாகவும், ஊடக முதலாளிகளாகவும் என்று அனைத்துக் கட்டங்களிலும் பின்னிப் பிணைந்திருக்கின்றவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் மக்கள் கருத்துக் கேட்பு என்பது, தங்களின் ஒத்த கருத்துள்ளவர்களைக் அழைத்து வைத்து மணித்தியாலக்கணக்கில் பேச வைத்து அதனை, மக்கள் மனுவாக முன்னிறுத்துகிறார்கள். இவர்களில் அநேகர் அதிக தருணங்களில் தமிழ் தேசிய அரசியலின் ஒருங்கிணைந்த மனோநிலைக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்தவர்கள். மக்களின் விருப்பு வெறுப்பிற்கு அப்பால் நின்று செயலாற்றியவர்கள். அப்படிப்பட்டவர்கள், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை தூக்கிக் கொண்டு வரும்போதுதான் அது இன்னும் பெரிய சந்தேகத்தை எழுப்ப வைக்கின்றது.



ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் இருக்கும் ரெலோ ஆரம்பம் முதலே ரணில் ஆதரவு நிலைப்பாட்டோடு இருப்பது. நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்வில் போது, ரணிலுக்கு ஆதரவாக ரெலோ உறுப்பினர்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்த கட்சியொன்றே முன்னர் வைத்திருக்கின்றது. புளொட்டைப் பொறுத்தளவில், சித்தார்த்தன் காலத்துக்குப்

தொடர்ச்சி ▼

# ரணிலுக்காகக் கொடி பிடிக்கும் தமிழ்த் தரப்புக்கள்!

தொடர்ச்சி ▲

பின்னர், அந்தக் கட்சிக்கான எதிர்காலம் என்பது இல்லை. அதனால், அதன் செயற்பாடுகள் என்பது சித்தார்த்தன் என்ற நபரைச் சுற்றியது மட்டுமே. ஏனெனில், இன்னமும் அமரர் தர்மலிங்கத்தின் மக்கள் ஆதரவுதான் அவரது மகனான சித்தார்த்தனைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது. இல்லையென்றால், புளொட்டின் கடந்த கால வரலாற்றுக்கு அந்தக் கட்சியை தமிழ் மக்கள் சீண்டவே மாட்டார்கள். ஏனெனில், தமிழ் ஆயுத இயக்கங்களுக்கு கறுப்புப் பக்கங்கள் உண்டு. ஆனால், புளொட்டுக்கு 2010 வரையிலும் இலங்கை இராணுவத்தோடு சேர்ந்து இயங்கியதற்கான கறுப்பு வரலாறு உண்டு. ஆக, சித்தார்த்தனுக்குப் பின்னரான தமிழ்ச் சூழலில் புளொட்டுக்கான எதிர்காலம் இல்லை. ஈ.பி.ஆர்.எல்.எழ். என்பது சுரேஷ் பிரேமச்சந்திரனின் கட்டுப்பாட்டில் இருப்பது. அந்தக் கட்சிக்கு வன்னியில் சில ஆயிரம் வாக்குகள் உண்டு. ஆனால், அந்த வாக்குகள் பலமான தமிழ்த் தேசியக் கட்சியோடு கூட்டணியாகக் களம் கண்டால் அன்றி தனியாவர்த்தனம் சென்று வெல்லும் அளவுக்கானது அல்ல. அதுபோல, சுரேஷைப் பொறுத்தளவில் அவர், அதிக தருணங்களில் தனித்து இயங்க முயற்சிப்பவர். அவரை, இரா.சம்பந்தனைத் தவிர வேறு எவரினாலும் அவ்வளவுதூரம் கட்டுப்படுத்தி வைத்திருந்தவர்கள் இல்லை. சம்பந்தனால்கூட 2014களின் இறுதியில் சுரேஷை தன்னுடைய இழுப்புக்கு இழுக்க முடியாத போதுதான், அவரை தோற்கடித்து கூட்டமைப்புக்குள் இருந்து வெளியே தள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நின்று அதனைச் சாதித்தார். இந்த மூன்று கட்சிகளைத் தாண்டி, ஜனநாயகப் போராளிகள் இதுவரை தேர்தல் அரசியலில் வெற்றிகளைக் கண்டவர்கள் அல்லர். அப்படியான நிலையில், இந்தக் கூட்டணியை முன்வைத்து தமிழ்த் தேசிய அரசியலில் பாரிய மாற்றங்களை நிகழ்த்துவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை.

குறிப்பாக, தமிழரசுக் கட்சி எந்தக் காரணம் கொண்டு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பொது வேட்பாளர் முடிவுக்கு ஆதரவளிக்காது. அப்படி ஆதரவளிப்பது, தமிழரசுக் கட்சியை தமிழ்த் தேசத்தின் பிரதான கட்சி என்ற கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி விடும் என்பது தெரியும். அத்தோடு, அடுத்த பொதுத் தேர்தலில்கூட தனித்து போட்டியிடுவதற்கே தமிழரசுக் கட்சிக்குள் இருப்பவர்கள் விரும்புவார்கள். அதன் மூலமே தங்களின் வெற்றியை பத்திரப்படுத்த முடியும் என்று தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்கள் கருதுகிறார்கள். தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும் முடிவு என்பது, தங்களின் வீட்டுச் சின்னத்தில் மற்றைய கட்சிகள் சவாரி செய்து வெற்றிபெற்று விடுகின்றன, ஆனால், தங்களின் உறுப்பினர்கள் தோற்றுப்போக வேண்டிவருகின்றது என்பதுதான் பிரதான காரணம். கடந்த பொதுத் தேர்தல் வாக்குகள் எண்ணும் பணிகள் முடிவுறும் தருணத்தில், தமிழ்த் தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் இந்தப் பத்தியாளரிடம், “...இந்தத் தேர்தல் முடிவுகள் மிக மோசமானது. கூட்டமைப்பின் பாரிய தோல்வி. அரச ஆதரவுக் கட்சிகளின் எதிர்பார்த்த வெற்றி. ஆனால், சித்தார்த்தனின் வெற்றி உறுதி செய்யப்பட்டது மாதிரியே நிகழ்ந்திருக்கின்றது. அது, தர்மலிங்கத்தின் சேவைக்கு கிடைத்த வெற்றி. மற்றப்படி, நாடாளுமன்றத்தில் ஒருபோதும் பேசாத சித்தார்த்தன் வெல்கிறார். அவரின் கடந்த காலங்களையெல்லாம் தமிழ் மக்களை மறந்து போக வைக்க தர்மலிங்கம் என்ற பெயரினால் முடிகின்றது...” என்று ஆதங்கப்பட்டார். இவ்வாறான ஆதங்கம், தமிழரசுக் கட்சிக்குள்ளும் பலமாக உண்டு. அப்படியான நிலையில், ஒருபோதும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் எந்த முனைப்பிலும் தன்னை இணைத்துக் கொள்ளாது. அப்படியான நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் கோசமும், புறக்கணிப்புக் கோசமும் தமிழ்ச் சூழலில் சலசலத்துப் போகும்.

இன்றைக்கு வடக்கு கிழக்கிற்கு வெளியில் உள்ள தமிழ் – முஸ்லிம் கட்சிகளை பொதுவேட்பாளர் கோசத்துடன் அணுகுதல் என்பது கள யதார்த்தத்துக்கு புறம்பானது. ரணிலை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சிலவேளை ஆதரிக்கலாம். ஏனெனில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்/க்குப் போட்டிக் கட்சிகளான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் இருக்கும் கட்சிகள் சஜித்தை ஆதரிக்கும் போது, அவர்களினால் அங்கு சங்கமிப்பது சாத்தியமில்லாமல் போகலாம். அது, காங்கிரஸை பொதுத் தேர்தலில் சிலவேளை அதிகமாக பதம் பார்த்துவிடும். அதனால், ஜீவன் தொண்டமான் ரணிலின் பின்னால் செல்ல வேண்டிவரலாம். மற்றப்படி, மனோ கணேசன், பழனி திகாம்பரம், வே.இராதகிருஷ்ணன் உள்ளிட்டோர் சஜித்திற்காகவே வாக்குச் சேகரிப்பார்கள். அதுபோலவே, முஸ்லிம் காங்கிரஸ்/ம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்/ம் சஜித்தோடுதான் நிற்பார்கள். அப்படியான புள்ளியில் பொது வேட்பாளர் விடயத்தை வடக்கு கிழக்கிற்கு வெளியில் தமிழ் பேசும் மக்களிடம் கொண்டு செல்ல முடியாது.

இதுவெல்லாம் அனைவருக்கும் வெளிப்படையாக தெரியும் உண்மைகள். ஆனால், இந்த உண்மைகளுக்குப் புறந்தள்ளி தங்களினால் தமிழ் வாக்குகளை கணிசமாக ரணிலின் வெற்றிக்காக ஒருங்கிணைக்க முடியும் என்று முனைபவர்களைக் காணும் போது சிரிப்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை. பொது வேட்பாளர் கோசம் என்பது, சஜித்துக்கு தமிழ் வாக்குகள் சேர்வதைத் தடுக்கும் திட்டங்களின் பிரதானமானது என்பதே இன்றை யதார்த்தம். ஏனெனில், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் என்பது அறம் சார்ந்த அணுகுமுறை என்றால், அது அதன் ஆரம்பக் கட்டங்களை மக்கள் சந்திப்புக்களில் இருந்து ஆரம்பித்திருக்க வேண்டும். மாறாக, மேலிருந்து மக்களிடம் திணிக்கும் கட்டங்களுக்கு நகர்த்திச் செல்லப்பட்டிருக்க வேண்டியதில்லை. கருத்துருவாக்கம் என்ற பெயரில் கருத்துத் திணிப்புக்களைச் செய்வது என்றால் அது அறம் சார்ந்தது அல்ல.



# 'யாழ் ஆரோக்கிய பவனி' நேற்று யாழ் நகரத்தில்!

அனைத்துலக சுழியக் கழிவு தினமான நேற்று யாழ் நகரில் 'யாழ் ஆரோக்கிய பவனி' தூய்மையாக்கல் பணியும், விழிப்புணர்வு செயற்பாடும் இடம்பெற்றன.

இந்தியத் துணைத் தூதரகம், யாழ் மாநகரசபை, யாழ் பிரதேச செயலகம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ் பொலிஸார் ஆகிய தரப்பினரின் பங்கேற்பில் சிகரம் நிறுவனத்தின் படலை வடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில்,

யாழ் மாநகர பகுதியில் தூய நகரை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ், யாழ் நகரின் பிரதான வீதிகள் சிலவற்றின் ஊடாகவும், யாழ்ப்பாணத்தின் சுற்றுலா ஈர்ப்பு வலயமாக காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரம் முதல் பண்ணை சுற்றுவட்டம் வரையிலான பகுதியிலும் தூய்மைக்கால் பணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ் ஆரியகுளம் சந்திப் பகுதியில் காலை 7 மணியளவில் ஆரம்பிக்கும் இந்தப் பணி, 3 வீதிகளூடாக யாழ் பண்ணைப் பகுதி வரையில் மேற்கொள்ளப்பட்டது.

பண்ணை நடைபாதை, யாழ் கோட்டை உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் பகுதிகளை நிரந்தரமாக தூய்மையாகப் பேணும் வழிவகைகள் குறித்த கலந்துரையாடலும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், இந்தியத் துணைத் தூதுவர், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ் மாநகர ஆணையாளர், மாநகர சபையின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் யாழ் வணிகர் கழக பிரதிநிதிகள், தன்னார்வலர்கள், பொலிஸார் எனப் பலரும் கலந்துகொண்டனர்.













# இன, மத நல்லிணக்கம்தான் நாட்டின் பலம் என்கிறார் சஜித்



எமது நாட்டில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், நட்புறவு என்றென்றும் பேணப்பட வேண்டும். நாட்டுக்கு இதுவே பக்க பலம். அந்தந்த மதங்களுக்குரிய மரியாதை வழங்கப்பட வேண்டும். பன்முகத்தன்மையை பாராட்ட வேண்டும். பன்முகத்தன்மையில் உருவாகும் ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும்,கலாசார விழுமியங்களுக்கும் உரிய மரியாதையும் கௌரவமும் அளிக்கப்பட வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையிலான அடையாளங்களைப் பாதுகாக்க வேண்டும். மத சுதந்திரத்திற்கான உரிமையைப் பாதுகாக்க வேண்டும். சுதந்திர நாட்டில் நாங்களும் நீங்களும் நம்பும், பின்பற்றும் மதத்தைப் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல ஒன்றிணையுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

இஸ்லாமிய மத நடைமுறைகளின் படி நோன்பு நோற்பதில் அனைவருக்குமிடையேயான பரஸ்பர நட்பு, சகோதரத்துவம், ஒற்றுமை மற்றும் இஸ்லாமிய சமயக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள உன்னத குணங்கள் நிறைவேறும் காலகட்டமாக இது அமைவதால்,ஆன்மீக ரீதியாக பக்குவப்பட்டு இறை திருப்தி சகலருக்கும் கிட்ட வேண்டும் என தான் நேர்மனம் கொண்டு பிரார்த்திக்கிறார் எனவும், விரும்புகிறார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு கொழும்பு வெள்ளவத்தை மெரைன் கிறேண்ட் வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வெளிநாட்டு தூதுவர்கள், ஆளும் எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழில் அதிபர்கள்,புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள்,சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகின்ற சமயத்தில் அதிகாரப்பயங்கரவாதம் நடப்பது பெரும் விசனம்!

## கல்முனையில் கஜேந்திரன் எம்பி.




( வி.ரி.சகாதேவராஜா)

நீதிமன்றத்தில் நிர்வாகம் தொடர்பான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீது அதிகாரப் பயங்கரவாதம் நடாத்துவது நீதிமன்றை அவமானப்படுத்தும் செயலாகும்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கல்முனையில் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செலுத்துகின்ற அதிகாரத்திற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துணை போவது நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றச் செயல். அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமிறக்குவதற்கான செயற்பாட்டிற்கும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துணை போவதும் நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்ற செயலென நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மேலும் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக பிரச்சனைகள் குறித்த போராட்டம் தொடர்ச்சியாக ஆறாவது நாளாக நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் மெழுகுவரத்தி ஏற்றி தங்களது கவன ஈர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோடீஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழரசுக் கட்சி நாடாளு–மன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், தமிழரசு கட்சியின் முன்னாள் வேட்பாளர்செல்வராசா கணேஷானந்தம் ஆகியோரும் பங்கேற்று இருந்தனர்.

அங்கு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் பேசுகையில் –

இதே போன்றதொரு போராட்டம் கடந்த காலங்களில் இடம்பெற்ற போது மூன்று நாளில் முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக உயர்த்தி தருவோம் என பல அரசியல்வாதிகள் வாக்குறுதி வழங்கினர். ராஜபக்ஷ அரசாங்கம், நல்லாட்சி அரசாங்கம் மற்றும் தற்போதைய ஜனாதிபதி முன்னாள் பிரதமராக இருந்த காலத்தில் முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக உயர்த்தி தருவோம் என வாக்குறுதி வழங்கியிருந்தனர். என்ன நடந்தது?

மேலும் அமைச்சரவை அதிகாரம் கிடைக்கப்பெற்ற பிரதேச செயலகத்தில் இயங்கிய இரண்டு கிராம சேவகப்பிரிவுகளை தெற்கு பிரதேச செயலகத்தில் அனுமதியின்றி இயங்கச் செய்திருப்பதும் மனித உரிமை மீறல்.– என அவர் இதன் போது சுட்டிக்காட்டி இருந்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.03.2024




வாழ்க்கையில் உன்னதமான குறிக்கோள்களை அடைய உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். இன்றை நாள் உங்களின் பொறுமையை சிறிது சோதிக்கும் நாளாக அமையும்.

இன்று இறுக்கமான வேலை காரணமாக பிஸியாக இருப்பீர்கள். பணியில் வெற்றி காண உங்கள் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டும்.

பதட்டம் காரணமாக உங்கள் துணையுடன் பேசும் போது விரக்தியை வெளிப்படுத்துவீர்கள். அதை தவிர்க்க நேர்மறை எண்ணத்துடன் செயல்படுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். சேமிப்பு குறைந்து காணப்படும். அதனால் கவலைகள் ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. தலைவலியால் அவதி ஏற்படும்.




உற்சாகமான கதைகளை படிப்பதன் மூலம் வெற்றியின் உயரத்தை தொடுவதற்கான உந்துதல் இன்று உங்களுக்கு கிடைக்கும்.

இன்று அதிக முயற்சியுடன் பணியாற்ற வேண்டும். பொறுமையுடன் இருந்தால் வளர்ச்சி காணலாம்.

மகிழ்ச்சியாக இருப்பதற்கு சிறிது அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நிதி சம்பந்தமான வளர்ச்சிகள் இன்று உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்காது. இன்று உங்கள் கவத்தை ஈர்க்கும் வகையில் சில சம்பவங்கள் நடக்கலாம்.

சிறிது மன அழுத்தம் இருந்தாலும் தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நேர்மறை எண்ணத்துடன் இருங்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணியிட சூழ்நிலை சாதகமாக இருக்காது. வேலையின் போது கவனக் குறைவு ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சில குறைபாடுகள் காணப்படலாம். அதில் கவனம் செலுத்தினால் அமைதியை பராமரிக்க முடியும்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். பல் வலியால் அவதிகள் நேரும். உணவில் கட்டுப்பாடு மேற்கொள்வது நல்லது.




இன்று ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் செயல்களை சிறந்த முறையில் செய்ய அதனை ரிலாக்ஸ்டாக செய்யுங்கள்.

வேலையில் நல்ல முடிவுகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணியை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

குடும்பத்தில் அமைதியை பராமரிப்பீர்கள். நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணம் தாராளமாக இருக்கும். ஊக்கத் தொகையாகவோ அல்லது இதர சலுகைகளாகவோ இன்று நீங்கள் பணத்தை பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.இன்றைய நாளை நீங்கள் நல்ல முறையில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள்.




இன்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் பணியின் வளர்ச்சி குறித்த கவலை இருக்கும். தற்போதைய கடமைகளில் அதிக கவனம் செலுத்துங்கள்.

தொடர்பு குறைபாடுகள் காரணமாக குடும்ப உறவில் அசாதாரணமான நிலை இருக்கும். முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

நிதி வளர்ச்சி இன்று சாதகமாக இல்லை. ஸ்திரத் தன்மையை தக்க வைத்துக்கொள்ள நிதியை கவனமாக பராமரிக்க வேண்டும்.

அஜீரணக் கோளாறு அல்லது தோள் வலியால் பாதிக்கப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களிடம் காணப்படும் பயம் காரணமாக உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். ஆதனால் உங்கள் முன்னேற்றத்தில் தடை இருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று மனதை ஒருமுகப்படுத்தி பணியாற்ற வேண்டியது முக்கியம். நீங்கள் தொழில் முறை அணுகுமுறையை பராமரிப்பது நல்லது.

அன்பின்மை காரணமாக குடும்ப நல்லுறவு பாதிக்கப்படும். குடும்பத்திற்கென நேரத்தை ஒதுக்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. உங்கள் செலவினங்கள் அதிகரித்து காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். வயிறு உபாதைகள் நேரலாம்.




திட்டமிட்ட செயல்களின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு அமைதியையும் மன நிறைவையும் பெற்றுத் தரும்.

இன்று பணியிட சூழ்நிலை சுமுகமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

அனுசரித்து நடந்தால் குடும்பத்தில் அமைதி நிலவும் அதனால் குடும்ப அங்கத்தினருள் நல்லுறவு ஏற்படும்.

இன்று உங்கள் வருமானம் அதிகரிக்கும். உங்களால் சேமிக்க இயலும்.

நீங்கள் வருத்திக் கொள்ளாமல் இருந்தால் இன்று உங்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். அதிகம் யோசிக்காமல் உங்கள் பணிகளை ஆற்றுங்கள்.




இன்று நீங்கள் செய்யும் செயல்களில் கவனம் அத்தியாவசியமாக தேவைப்படும்.

முறையாக பணியை மேற்கொள் நீங்கள் இன்று அனுசரித்து நடக்க வேண்டும். அது உங்களை வளர்ச்சிப் பாதைக்கு அருகில் அழைத்துச் செல்லும்.

சில சம்பவங்களால் மன அமைதி கெடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ பெரியவர்களிடம் ஆலோசனை பெறுங்கள்.

இன்று உங்கள் நிதிகளை பராமரிப்பதில் நீங்கள் மிகவும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரார்த்தனை மூலமாக நீங்கள் நேர்மறை ஆற்றல் பெற முடியும்

# இன்றைய ராசி பலன்கள் - 31.03.2024




இன்று நீங்கள் நம்பிக்கை மற்றும் உறுதியுடன் செயல்பட வேண்டும்.

எதிர்பார்க்கும் பலன் கிடைக்க நீங்கள்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் அதிகமாக வேலை செய்வதன் மூலம் உங்கள் திறமையை உணர முடியும்.

குடும்ப உறுப்பினர்களிடம்ஒற்றுமை குறைந்து காணப்படும். இன்று சுப நிகழ்ச்சிகள் நடப்பதற்கான சாத்தியம் இல்லை.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

அதிக வேலை காரணமாக களைப்புடன் காணப்படு வீர்கள். எண்ணெய்ப் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்




ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும்.

ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதிநிலையை கையாள்வதை கடினமாக உணர் வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.




உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதட்டம் காணப் படலாம். பணிச் சுமையயை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்ப உறவில் அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவன மாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது.

இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண் டும்




இன்றைய முக்கியமான நிகழ்வு களில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந் துணர்வும் அனுசரனையும் இருந்தால் சரி செய்து விட முடியும்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். திட்ட மிட்டு பணத்தை சேமிப்பது நல்லது.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படலாம். பொறுமையுடன் இருங்கள். யோகா செய்யுங்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# யாழ். மறைமாவட்ட ஆயரின் ஈஸ்டர் தின வாழ்த்துச் செய்தி



யாழ் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை இன்றைய ஈஸ்டர் தினத்தை ஒட்டி வாழ்த்துச் செய்தி வழங்கியிருக்கின்றார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

2024 ஆம் ஆண்டுக்கு உரிய உயிர்ப்பு பெருவிழாவை உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்க மக்கள் கொண்டாடும் வேளை இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் இந்தப் பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

கல்லறையின் கதவுகளை உடைத்தெறிந்து உயித்த நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து, சமூகத்தில் நாதியற்று, வாழ வழிதெரியாது அங்கலாய்த்து நிற்போரதும், தமது மாண்பைப் பாதுகாக்க ஏங்குவோரதும் ஏழை எளிய மக்களதும் தேவைகளை நிறைவேற்ற எம் மனங்களைத் திறந்து தனது உயிர்ப்பின் ஒளியால் எம்மையும் எம் மக்களையும் ஒளிபெறச் செய்வாராக.

உயித்த ஆண்டவர் வெறுமனே சாவை வென்றவர் மாத்திரமல்லர், அவர் வாழ்வை மீட்டெடுத்தவர். விண்ணக மகிமையை ஆன்மாக்கள் மீண்டும் பெற்றுக்கொள்ள வழிசமைத்தவர்.

உயிர்ப்பு என்பது பாவ மன்னிப்பைப் பற்றியது மட்டுமல்ல, மாறாக கிறிஸ்துவுடன் இறந்து உயிர்த்தெழும் ஒவ்வொரு மனிதனுடைய ஆன்மாவின் தற்காலிக மற்றும் நிலையான மாட்சியைப் பற்றியது. நாம் நற்செய்தியில் கவனம் செலுத்தி, இயேசு கற்பித்த படிப்பினைகளையும் அவருடைய முன்மாதிரிகைகளையும் கருத்தில் கொள்ளும் போது, சில வேளைகளில் சிலுவை கடினமான செய்தியாகவும், உயிர்ப்பு எளிதான செய்தியாகவும் நமக்கு அமையலாம்.

இயேசு தன் வாழ்வாலும் வார்த்தையாலும் தந்த சிலுவையின் செய்தி சவால்மிக்கதாகும். நாம் ஒவ்வொருவரும் தன்னலம் துறந்து தந்தையாம் இறைவனின் திருவுளத்துக்கு எம்மை முழுமையாக சரணாகதியாக்க வேண்டும். எமது சுயநலன்கள், தீமையான சிந்தனைகள், செயற்பாடுகளுக்குள் நாம் இறக்க வேண்டும்.

உயிர்த்த கிறிஸ்துவோடு புதுவாழ்வு பெற்றவர்களாக, புனிதர்களைப் போன்று நாம் கிறிஸ்துவில் வாழ எம்மை நாம் பழக்கிக்கொள்ளவேண்டும்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா நல்வாழ்த்துக்கள் உங்களுக்கு அனைவருக்கும் உரித்தாகுக. - என்று உள்ளது.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் போது உயிரிழந்தோரை நினைவு கூருகின்றேன்

## ஈஸ்டர் ஞாயிறு தினச் செய்தியில் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



இன்று ஈஸ்டர் ஞாயிறு தினத்தை ஒட்டி வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மானிட குலத்தை மீட்பதற்காக மனித உருவெடுத்துவந்த இறைமகன் கிறிஸ்து, மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த இந்த உன்னதமான நாளை கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிறு தினமாகக் கொண்டாடுகின்றனர்.

"சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவை சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்படிந்தவரானார்" என்ற திருவிவிலிய வாக்கியத்துக்கு அமைய, அடிமைத்தன ஆதிக்கம் செலுத்திய காலத்தில் மீட்பு, சமாதானம், சமத்துவம், அன்பு, நட்புறவு என்று அனைத்தையும் இந்த உலகுக்குப் பரிசளிப்பதற்காக அவமானத்தின் சின்னமாகக் கருதப்பட்ட சிலுவைச் சாவை கிறிஸ்து ஏற்றார். ஆனாலும் இறந்த கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து சாவின் ஆதிக்கத்துக்கு அந்தம் கொடுத்தார்.

இவ்வாறான மகத்துவம் நிறைந்த நன்னாளில் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். உயிர்ப்பு விழாவுக்கான தயார்படுத்தலான தவக்காலத்தின் 40 நாள்களும், கிறிஸ்தவ மக்கள் ஒறுத்தல் முயற்சிகளிலும், நற்காரியங்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

மோசமான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள இந்த நாட்டை, பிரஜைகளாகிய நாம் அனைவரும் ஒற்றுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் மீட்டெடுத்துவரும் மகிழ்ச்சிகரமான வேளையில் இந்த ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடுகிறோம். நாட்டின் கடன் நெருக்கடிகள் நீங்கி, மக்களுக்கு சுபீட்சமும் சமாதானமும் நிறைந்த நல்வாழ்வை உயிர்த்த கிறிஸ்து வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

நாட்டை உலுக்கிய ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களையும் இந்த வேளையில் நினைவு கூருகின்றேன். அவர்களின் பிரிவின் நிமித்தம் வாடுவோருக்கும் உயிர்த்த கிறிஸ்துவின் தேற்றுகை கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். அனைவர் மனங்களிலும் அமைதியும், மகிழ்வும் பெற. இந்தத் தருணத்தில் ஈஸ்டர் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அக மகிழ்வடைகின்றேன். - என்று உள்ளது.

# தமிழ்தேசியத்தின் தந்தை

**(இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் ஜனன தினம் இன்று அனுஷ்டிக்கப் படுகின்றது. இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது)**



**- நடராஜன் ஹரன் -**

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுயாட்சியை அமைத்துக் கொடுப்பதற்காக 30 வருட அகிம்சை வழிப் போராட்டத்தில் சாதித்தது என்ன என்பதை அன்னாரது 126 ஆவது பிறந்தநாளில் மீளாய்வு செய்வதன் மூலம் அவரது கொள்கையின் யதார்த்தத்தை புரிந்து கொள்ளலாம்.

“ஒற்றையாட்சி தமிழர்களை அழிக்கும்! சமஷ்டி ஆட்சியே ஐக்கியமாக வாழ வழி வகுக்கும்!” – தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனம்.

தமிழ் தேசியத்திற்கு 1949இல் அடித்தளமிட்ட பெருந்தலைவர். அதை அடைவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியை நிறுவி மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளை ஆராய்வது இன்றைய அரசியல் சூழ்நிலையில் பொருத்தமானதே.

இலங்கை அரசியலில் தலைசிறந்த நேர்மையான அரசியல் தலைவராக மதிக்கப்பட்ட தந்தை செல்வா சாமுவேல் ஜேம்ஸ் செல்வநாயகம் அவர்களின் அரசியல் தீர்க்க தரிசனம் 60 ஆண்டுகளின் பின்னரும் யதார்த்தமாக அரசியல் ஆய்வாளர்களால் நோக்கப்படுகிறது.

தொல்புரத்தைச் சேர்ந்த சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளைக்கும் அன்னம்மா கணபதிப்பிள்ளைக்கும் மூத்த மகனாக எமது செல்வநாயகம் மலேசியாவின் மிகவும் தூய்மையான நகரமான இல்போ நகரில் 1898ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி பிறந்தார்.

அவருக்குப் பின் வேலுப்பிள்ளை தம்பதியருக்கு இரண்டு புத்திரர்களும் ஒரு மகளும் பிறந்தார்கள். வேலுப்பிள்ளை தம்பதியினர் தமது மழலைச் செல்வங்கள் கல்வி கற்றுமேன் மக்களாக விளங்க வேண்டும் என ஆசைப்பட்டார்கள்.

அக்காலகட்டத்தில் பாடசாலைகள் குறைவு. இருந்த சில நல்ல பாடசாலைகளும் அரச குடும்பத்தினரையும் பெரிய பணக்காரக் குழந்தைகளையுமே அனுமதித்தன. எனவே, வேலுப்பிள்ளை தம்பதியினர் தமது மழலைச் செல்வங்களை கல்வி கற்பதற்காக மலேசியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினார்கள். அப்பொழுது எமது கதாநாயகன் செல்வநாயககத்துக்கு வயது நான்கு. தனது இரண்டு சகோதரர்களுடனும் ஒரு சகோதரியுடனும் மலேசியாவிலிருந்து கொழும்புக்கு கப்பலில் வந்திறங்கினான் பாலகன் செல்வநாயகம். அப்போது கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு புகையிரத சேவை ஆரம்பிக்கப்படாமையினால் மீண்டும் கப்பலிலேயே காங்கேசன்துறைக்கு வந்து தமது சொந்த ஊரான தெல்லிப்பழைக்கு வந்தார். அங்கு அமெரிக்க மிஷன் பாடசாலையில் 5 ஆம் வகுப்புவரை கல்வி பயின்றார். இந்த அமெரிக்க மிஷன் பாடசாலைதான் பின்பு யூனியன் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டது கவனததுக் குரியதாகும். சிறு வயதிலே செல்வநாயகம் பெண் வேடம் பூண்டு நாடகங்களில் நடித்தாராம்.

ஐந்தாம் வகுப்புக்குப் பின்னர் செல்வநாயகம் யாழ்ப்பாணம் சென்று சென்.ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து சீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கினார். பின்னர் மாமனார் எஸ்.கே. பொன்னுசாமியின் உதவியுடன் கொழும்பு சென். தோமஸ் கல்லூரியில் சேர்ந்து தமது கல்வியைத் தொடர்ந்தார்.

சென். தோமஸ் கல்லூரியில் ஏறத்தாழ ஒன்றரை வருட காலம் கல்வி கற்று இன்டர்சயன்ஸ் பரீட்சையில் தேறிய செல்வநாயகம் தனது தம்பிமாரைப் படிப்பிப்பதற்காக 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

ஆசிரியராக இருந்து கொண்டே லண்டன் பல்கலைக்கழக பி.எஸ்.ஸி. விஞ்ஞானப் பட்டப் பரீட்சைக்கு வெளிவாரி மாணவனாகத் தோற்றி அடுத்த ஆண்டே அதாவது, 1918இல் சித்தி எய்தினார்.

இந்தத் தருணத்தில் மலேசியாவிலிருந்த அவரது தந்தையார் சுகவீனமுற்றிருந்தமையால் அவரைப் பார்க்க மலேசியா சென்று சுமார் ஒரு மாதம் வரை தங்கியிருந்து மீண்டும் திரும்பினார். ஆனால், என்ன பரிதாபம்! செல்வநாயகம் இலங்கை திரும்பி வந்த ஓரிரு வாரங்களிலேயே அன்னாரது தந்தையார் மலேசியாவில் காலமானார்.

அதனால் குடும்பப் பொறுப்பு அனைத்தும் இளைஞரான செல்வநாயகத்தின் மேல் சுமத்தப்பட்டது. தமது பிற்காலத்தில் இலங்கைத் தமிழினத்தின் பொறுப்பெல்லாவற்றையும் சிரமேற் கொண்ட தமிழ்த் தந்தைக்கு தந்தையில்லாத குடும்பத்தின் பொறுப்பைச் சுமப்பதா பெரிய காயம்! இரண்டு தம்பிமாரையும், அருமைத் தங்கையையும் அரவணைத்துக் கொண்டு கொழும்பு சென்ற்.தோமஸ் கல்லூரியில் தமது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார்.

எனினும், அன்னாருக்கு சோதனை தொடர்ந்தது. யாழ்ப்பாணத்தில் அவரது இளைய சகோதரருக்கு கடும் சுகவீனம்.

அவரைப் பார்ப்பதற்கு தெல்லிப்பழை செல்ல லீவு கேட்டார், லீவு மறுக்கப்பட்டது. ஆசிரியர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு தெல்லிப்பழைக்குச் சென்றார்.

தம்பியை நன்கு பராமரித்தும் என் செய்வது? பலனில்லாமல் போய் விட்டது. அருமைத்தம்பி இராஜசுந்தரம் தமது பதினைந்தாவது வயதில் காலமானார்.

தம்பியின் இறுதிச் சடங்கு முடிந்து மீண்டும் கொழும்பு வந்த செல்வநாயகம், வெஸ்லி கல்லூரியில் ஆசிரியரானார். எஸ்.ஜே.வி. ஆசிரியனாக இருந்த காலத்தில் நல்லாசிரியன் என்ற பெயரை பெற்றோர், ஆசிரியர், மாணவர்களிடம் பெற்றார். பிற்காலத்தில் நல்ல, நேர்மையான சட்டத்தரணி என்று பெயரும் புகழும் பெற்றாரோ, அரசியலில் நுழைந்த பின்னர் எவ்வாறு உலக மக்கள் அனைவராலும் தமிழ் பேசும் மக்களின் தன்னிகரில்லாத் தலைவன் என்றும், நேர்மையான அரசியல்வாதி என்றும் பெயரும் புகழும் பெற்றாரோ அதே போல அவர் நல்லாசிரியன் என்று பெயரும் புகழும் பெற்றதில் எவ்வித ஆச்சரியமும் இருக்க முடியாது என்பது திண்ணம்.

அந்தக் காலத்தில் செல்வா ஆசிரியராக உலா வந்தபோது அன்னா

தொடர்ச்சி ▼

# தமிழ்தேசியத்தின் தந்தை

தொடர்ச்சி ▲

ரது நடை, உடை, பாவனையைப் பின்பற்றிய மாணவர்கள் பலர். அதிகம் ஏன்? அவரது நடு உச்சி தலைவாரும் பழக்கத்தைக் கூட வெஸ்லிக் கல்லூரி மாணவர்கள் கொண்டிருந்தார்கள் என்றால் பாருங்களேன்.

1918ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரியான செல்வநாயகம் ஆசிரியராக இருந்த போதே சட்டக்கல்லூரியில் சேர்ந்து 1924ஆம் ஆண்டு சித்தியெய்தி சிவில் சட்டத்துறையைத் தேர்ந்தெடுத்து சட்ட வல்லுநரானார். அத்தொழிலில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தினார். அப்போதெல்லாம் தமது வாழ்நாள் இலட்சியம் சுப்பிரிம் கோர்ட்டுக்கு நீதியரசராவதே என்று கூறுவது உண்டு.

எஸ்.ஜே.வி. புகழ்பெற்ற சட்டத்தரணியாக இருந்த காலத்தில் அன்னாரது ஜுனியராக இருந்து பிற்காலத்தில் பிரபல சட்டத்தரணிகளாகிய சிலரை இங்கு பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

பிரதம நீதியரசர் பதவி வகித்த நெவில் சமரகோன், எஸ். சர்வானந்தா, இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தந்தை எட்மண்ட் விக்ரமசிங்க, வி. நவரட்ணராஜா, சி.இரங்கநாதன் என்போர்.

இவ்வாறு புகழ்பூத்த சட்டத்தரணியாக இருந்த செல்வா அரசியலில் நுழைந்தது அவரது போதாத காலமாக இருக்கலாம். ஆனால், அந்த நிகழ்ச்சி ஈழத்து தமிழினத்தின் தவப்பேறாகும்!

1944ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி கொழும்பு சைவமங்கையர் கழக மண்டபத்தில் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அங்குரார்ப்பண கூட்டத்தில் செல்வா கலந்து கொண்டார். தொடர்ந்து சோல்பரி கமிஷன் முன் ஜி.ஜி. சாட்சியமளித்த போது செல்வா அவர்கள் அருகிலிருந்து தம்மாலியன்ற பங்களிப்பை வழங்கினார்.

1947இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எஸ்.ஜே.வியின் பங்களிப்பு அளப்பரியது. தமிழ்க் காங்கிரஸ் யாழ். குடாநாட்டில் ஏழு வேட்பாளர்களும் கிழக்கு மாகாணத்தில் இரண்டு வேட்பாளர்களுமாக மொத்தம் ஒன்பது வேட்பாளர்களை நிறுத்தியது. தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜி.ஜிக்கு அடுத்தபடியாக எஸ்.ஜே.விதான் பிரதம பேச்சாளர். தமக்கே உரித்தான மெல்லிய உடல்வாகுடன் மென்மையாக ஆறுதலாக ஆனால், உறுதியாக நிறுத்தி, நிறுத்தி அவர் பேசிய உரைகள் அனைவரையும் பெரிதும் கவர்ந்தன.

அந்தத் தேர்தலில் எஸ்.ஜே.வி. காங்கேசன்துறையில் போட்டி போட்டு வெற்றி பெற்றார். யாழ். குடாநாட்டில் ஆறு தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ் பெரு வெற்றியீட்டியது. எஸ்.ஜே.வி.யின் ஜுனியராகக் கடமையாற்றிய கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கம் கோப்பாய்த் தொகுதியில் பெரு வெற்றியீட்டினார்.

ஜி.ஜி.க்கு கைத்தொழில் அபிவிருத்தி, கடற்றொழில் அமைச்சு வழங்கப்பட்டது. ஜி.ஜி.யுடன் கே. கனகரத்தினம் (உதவி மந்திரிப் பதவி), சி.இராமலிங்கம், வி.குமாரசாமி போன்றோர் அரசுடன் இணைந்தனர். செல்வநாயகம், வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் அரசுடன் இணைய மறுத்துவிட்டனர்.

1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜி.ஜி. அமைச்சராகி அரசுடன் இணைந்தார். அன்றிலிருந்து தமிழ்க் காங்கிரஸ் ஜி.ஜி. குழு, செல்வநாயகம் குழு என இரண்டாகப் பிரிந்து வெள்வேறாகக் கூட்டங்களும் நடத்தத் தொடங்கினர். அக்காலகட்டத்தில் செனட்டராக இருந்த இ.எம்.வி. நாகநாதன், செல்வநாயகம் குழுவில் இணைந்து கொண்டார்.

தொடர்ந்து தமிழரசுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதும் தன்னிகரில்லாத் தலைவராக தந்தை எஸ்.ஜே.வி. விளங்கியதும், பின்னர் நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் அன்னார் வெற்றி பெற்றதும் அனைவரும் அறிந்ததே.

பெரியவர் செல்வநாயகம் தமிழர் விடுதலைக்காக, தமிழ் மக்கள் அமைதியாக தமது தாயகத்தில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக இறுதி வரை ஒரு சத்தியாக்கிரகியாக, ஊழலற்ற வாழ்க்கையைக் கடைப்பிடித்தார். அமரர் செல்வநாயகத்தின் தீர்க்கதரிசனமான பண்டா-செல்வா ஒப்பந்தத்தையோ அல்லது பண்டா-டட்லி ஒப்பந்தத்தையோ மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் நிறைவேற்றி இருந்தால் எத்தனை பொருள் இழப்புகள், உயிர்ச் சேதங்கள், அனர்த்தங்களை இந்த நாடு தவிர்த்திருக்கும்.

சோல்பரியின் ஒற்றையாட்சி தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும், மாற்று அரசியல் அமைப்பு எமக்குத் தேவை. பல்லின, பலமத, பலமொழி பேசும் மக்கள் வாழும் நாடுகளுக்கு பொருத்தமான அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்று உள்ளது.

அமெரிக்கா, கனடா, சோவியத் யூனியன், அவுஸ்ரேலியா, இந்தியா, சுவிஸ் உட்பட பலநாடுகளில் அத்திட்டம் நடைமுறையில் உள்ளது. அதுதான் சமஸ்டித் திட்டம் என்றார் தந்தைசெல்வா.

தமிழ் மக்களுக்கு மாற்று அரசியல் திட்டம் வேண்டும் என்பதை 1949 இல் உணர்ந்தார். சோல்பரி அரசியல் திட்டத்தை தீவிரமாக எதிர்த்தார். அதற்கான மாற்றுத் திட்டம் பற்றி பல அரசியல் நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

1949 ஜனவரி இரண்டாம் வாரத்தில் கொள்ளுப்பிட்டியில் உள்ள தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சமஸ்டி அரசியல் திட்டத்தை தந்தை செல்வா சமர்ப்பித்தார். அங்கு குழுமியிருந்த திரு.வன்னியசிங்கம் உட்பட பல சட்டவல்லுனர்கள் அதை விவாதித்து ஏகமனதாக அங்கீகரித்தனர்.

மேலும் தந்தை செல்வா அவர்கள் அளித்த விளக்கங்கள் “ஒற்றையாட்சி முறை, சிங்களவர்கள் தமது சனத்தொகைப் பலத்தை உபயோகித்து தமிழ் இனத்தை அடக்கி ஆள்வதற்கு வசதியளிக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளில் ஒவ்வொரு இனமும் தாம் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் தம்மைத் தாமே ஆட்சி புரிய அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் அவரவர்கள் சுதந்திர தனியரசாக இயங்குவதில்லை. சமஸ்டி அமைப்பாக இயங்குகின்றன. அத்தகைய சமஸ்டி அமைப்புத்தான் இலங்கைக்குத் தேவை.” தமிழர்களுக்கு ஒரு சுயாட்சி, தனியரசு வேணும் என்பதை 60 வருடங்களுக்கு முன்னர் கூறியது இன்றும் யதார்த்தமாக நோக்கப்படுகிறது.

இந்த இலட்சியத்தை அடைவதற்கு 30 வருட காலமாக அகிம்சை வழிப் போராட்டம் நடத்தினர். அதனால் ஏற்பட்ட பலாபலன்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை 1948 லிருந்து, முதலில் நாடாளுமன்ற மேடையைச் சரியாகப் பயன்படுத்தி ஜனநாயக வழிகளில் தனது கருத்துக்களை முன்வைத்தார்.

அரசியலில் தமிழர் பிரச்சினைகளில் எவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் ஆணித்தரமான கருத்துக்களை சிங்கள தலைவர்களுக்கு அச்சமின்றி எடுத்துக் கூறிய துணிவுமிக்க பெருந்தலைவர் தந்தை செல்வா அவர்கள்.

அவர் 1948 இல் இருந்து நாடாளுமன்றத்தில் ஆற்றிய எழுச்சி

தொடர்ச்சி ▼

# தமிழ்தேசியத்தின் தந்தை

தொடர்ச்சி ▲

யுரைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. நாடாளுமன்றம் மூலம் போராடிய வரலாறு இதுவாகும்.

தேசியக் கொடி குடியுரிமை மசோதா (19-08-1948) பாராளு மன்றத் தேர்தல்கள் திருத்த மசோதா, இந்திய பாகிஸ்தானியர் குடியிருப்போர் பிரஜா உரிமைச் சட்டம், அரச கருமமொழி மசோதா, அரச கருமமொழி இரண்டாவது வாசிக்கு ஆகிய எழுச்சி உரைகள் ஒரு நூலாகவும் வெளிவந்துள்ளது. இந்த எழுச்சி உரைகள் கேட்ட சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

ஜனநாயக வழியில் போராடிப் பெறக்கூடிய திட்டமே சமஸ்டி அரசியல் திட்டம். இந்த அரசியல் திட்டத்தை நன்கு விளங்கிய திரு.எஸ். டபிள்யு. பண்டாரநாயக்கா, ஆட்சிப் பீடத்தைப் பிடிப்பதற்காக ஒரு இனவாத அரசியல்வாதியாக மாறி நியாயத்துக்கு மாறாக ஆட்சி நடத்தினார்.

தந்தை செல்வா இலங்கையில் உள்ள பல இன மக்களும் ஐக்கியமாக வாழக்கூடிய சமஸ்டி அரசியல் அமைப்பை வென்றெடுப்பதற்கு 30 வருடமாக அகிம்சை வழியில் போராடி வந்தார்.

1951 ஆம் ஆண்டு வரலாற்றுப் பெருமை பெற்ற திருகோணமலையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டில் தந்தை செல்வாவின் தலைமையில் நிறைவேற்றிய தீர்மானம்.

"பரிபூரண அரசியல் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு ஒவ்வொரு இனத்துக்கும் பிரிக்கவொண்ணாத உரிமை உண்டு என்பதாலும் –

அவ்வுரிமையின்றி அவ்வினத்தின் ஆன்மீக,கலாச்சார, தார்மீகப் பொலிவு சீரழிந்து விடும் என்பதாலும்–


இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் என்று கணிப்பதற்கான ஒவ்வொரு அடிப்படைத் தகுதிகளிலும் அதாவது முதலாவதாக குறைந்த பட்சம் சிங்கள மக்களை ஒத்த அளவிற்காவது புராதனமானதும் புகழ் செறிந்ததுமாக இத்தீவில் தனியொரு வரலாற்றாலும் –

இரண்டாவதாக ஒப்பற்றதோர் இலக்கியப் பாரம்பரியத்துடனும், இக்காலத் தேவைகள் அனைத்துக்குமே போதுமானதாகத் தமிழ்மொழியை இலங்கச் செய்யும் நவீன வளர்ச்சியுடனும் விளங்குவதுதான் சிங்களவர்களின் மொழியினின்றும் முற்றாக வேறுபட்ட தனியொரு மொழிவாரி மக்கள் என்ற உண்மையாலும் –

இறுதியாக இத்தீவின் மூன்றிலொரு பாகத்தை மேவிச் செறிந்துள்ளதான குறிப்பிடத்தக்க நிச்சயமான நிலப்பரப்பில் வசிக்கும் மக்கள் அவர்கள் என்ற காரணத்தாலும் சிங்களவர்களில் இருந்து வேறுபட்ட ஒரு தனியினமாக அவர்கள் விளங்குகின்றார்கள் என்பதாலும்–

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இந்த முதலாவது தேசிய மாநாடு இலங்கைத் தமிழ் பேசும் இனத்துக்கு என்று பிரிக்க முடியாத அவர்களின் அரசியல் சுயாதீன உரிமையைக் கோருவதுடன் அடிப்படையானதும் –

மறுக்கவொண்ணாததுமான சுயநிர்ணயக் கோட்பாட்டுக்கு



அமைய மொழிவாரி அரசுகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கன ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்துமாறு கேட்டுக் கொள்கிறது" இது நாடாளுமன்ற மூலம் தந்தை செல்வா நடத்திய போராட்டம்.

இந்தக் கருத்துக்களுக்கும் சிங்களத் தலைமை சிந்திக்கத் தவறியதைத் தொடர்ந்து அகிம்சை வழியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

1956 யூன் மாதம் 5ம் திகதி காலிமுகத்திடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தை பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டிபண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தின் மேல்மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருக்க, சிங்களக் குண்டர்கள் சத்தியாக்கிரகிகளை குண்டாந்தடிகளால்த் தாக்கி சத்தியாக்கிரகத்திற்கு இடையூறு விளைவித்தனர்.

தாக்கப்பட்டபோதும் தமிழ்த் தலைவர்களும், தொண்டர்களும் அவ்விடத்தை விட்டுஅசையவில்லை. தாக்கப்பட்ட திரு.அமிர்தலிங்கம் இரத்தக்கறையுடன் நாடாளுமன்றம் சென்று உரையாற்றினார். காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் தமிழர் பிரச்சினையை சர்வதேசத்துக்குக் கொண்டு சென்றது.

1961 இல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் வடகிழக்குத் தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்தது. தமிழக மக்களிடையே புதிய எழுச்சியை ஏற்படுத்தியது. இந்திய அரசாங்கத்தைச் சிந்திக்க வைத்தது.

அகிம்சை வழிப் போராட்டத்தால் தமிழர் தாயகத்தில் அதாவது வடகிழக்கில் அரசாங்கத்தின் நிர்வாகம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. தமிழர் பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டது. அதிக உயிரிழப்புக்களின்றி தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை என்ற ஆயுதத்தால் இலங்கை அரசை அதிர வைத்த நிகழ்வே 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம்.

தந்தை செல்வா தலைமையில் நடைபெற்ற இம் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் இராணுவத்தால் முறியடிக்கப்பட்டாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றி. அது தந்தை செல்வாவின் சாதனை.

1956 இல் தந்தைசெல்வாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருமலை யாத்திரை, அதைத் தொடர்ந்து திருகோணமலை தலைநகரில் நடைபெற்ற மாநாட்டில் விடுக்கப்பட்ட அறை கூவலால் ஏற்பட்டதே பண்டா – செல்வா ஒப்பந்தம்.

அதன் மூலம் ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தார். ஒப்பந்தம் பின்வருவனவற்றை உறுதி செய்தது.

1. தமிழர் தாயகம் வடக்கும் – கிழக்கும் என்பதை ஏற்கச் செய்தல்,

2. தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்தல்,

3. தமிழ்மொழியை தேசிய மொழியாக்குதல்,

4. வடக்கிலும் கிழக்கிலும் தமிழில் நிர்வாகத்தை ஏற்படுத்துதல்,

5. இலங்கையின் தேசிய சிறுபான்மையினரின் மொழியாகத் தமிழை அங்கீகரிக்கச் செய்தல்,

6. பிரஜா உரிமைப் பிரச்சினையை மீளாய்வு செய்யச் செய்தல்,

7. சுயநிர்ணய உரிமை பிரதேசங்களை இணைக்கும் உரிமை மூலம் உள்ளே கொண்டு வரப்பட்டது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கண்டி யாத்திரை, பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு என்பவற்றால் ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டாலும் தந்தை செல்வாவின் சமஸ்டி அடிப்படையில் ஒப்பந்தம் உருவானது ஒரு முதல்படி. அது தந்தை செல்வாவின் சாதனை.

அடுத்து 1965 இல் டட்லி சேனநாயக்காவுடன் செய்து கொண்ட இரண்டாவது ஒப்பந்தம் மற்றுமோர் சாதனை. 24-03-1965 இல்

தொடர்ச்சி ▼

# தமிழ்தேசியத்தின் தந்தை

**தொடர்ச்சி▲**

டட்லி – செல்வா கையொப்பமிட்ட ஒப்பந்தம். டட்லி சேனநாயக்கா ஒப்புக்கொண்டவை. இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டவை,

1. வட–கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும் அவற்றைத் தமிழிலேயே பதிவதற்கும் தமிழ்மொழி விசேட விதிகளுக்கு அமைய உடனே நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு தமிழ் பேசும் குடிமகன் நாடு முழுவதிலும் தமிழில் காரியமாற்ற உரிமையுள்ளவன் என்பதே தன் கட்சியின் கொள்கை என்பதையும் திரு. சேனநாயக்கா விளக்கினார்.

2. வட – கிழக்கு மாகாணங்களில் உள்ள சட்டபூர்வ நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்கு தமிழ், நீதிமன்ற மொழியாக இருப்பது தன் கட்சியின் கொள்கையென்று திரு.சேனநாயக்கா ஏற்றுக் கொள்கிறார்.

3. இரண்டு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில் மக்கள் பாலுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப இலங்கையில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மை கருதி சட்டங்களுக்கமைய மாவட்ட சபைகளுக்கு மேலான அதிகாரங்கள் அரசுக்கு உண்டு என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. இலங்கைப் பிரஜைகள் காணிப்பங்கீடுகளில் காணி பெறும் வண்ணம் காணி அபிவிருத்தி விதிகள் திருத்தியமைக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டாலும் சமஸ்டி அடிப்படையிலான தீர்வுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் இணங்கியது ஒரு வரலாறு. தவிர சிங்கள தலைமையுடன் இணைந்து பங்காளியாக இருந்தால் அவர்கள் தமிழர் உரிமையை வழங்குவர் என்ற ஒரு பகுதியினரின் கருத்து இந்த தேசிய அரசாங்கம் மூலம் முறியடிக்கப்பட்டது.

தந்தை செல்வாவின் அகிம்ஸை வழி அணுகுமுறைக்குக் கிடைத்த இரண்டாவது சாதனை இதுவாகும். தந்தை செல்வாவை ஏமாற்றிய டட்லி சேனநாயக்காவின் கட்சி 1970 இல் படுதோல்வி அடைந்தது.

1960 யூலையில் ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்காவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு பண்டா – செல்வா ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று கொடுத்த உறுதிமொழியே டட்லி சேனநாயக்கா அரசை வீழ்த்தி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை அமர்த்த வழிவகுத்தது.

தந்தை செல்வா இரண்டாவது தடவையாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பண்டா – செல்வா ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வைத்ததன் மூலம் தந்தை செல்வா சாதனை படைத்தார். தேர்தலில் அமோக வெற்றியீட்டிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசு கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை. ஏமாற்றி விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

சிங்களத் தலைமைகளிடையே ஏமாற்றும் படலம் ஊறிப்போன விடயம். டி.எஸ்.சேனநாயக்கா தொடக்கம் ஆட்சிக்கு வந்த மகிந்த ராஜபக்ஷவரை தமிழ்த் தலைமைகளை ஏமாற்றியவர்களாகவே வரலாறு பதித்துள்ளனர்.

1960 தேர்தலின் பின் தமிழரின் போராட்ட முறையில் பெரும் மாற்றத்தைச் செய்தார். புதிய யுத்திகளை பரீட்சித்தார். அரசாங்கத்தை ஆக்குவது, அரசாங்கத்தை அழிப்பது, அரசாங்கத்தில் இணைவது.

1960 தேர்தல் முடிவுகள் அச்சந்தர்ப்பத்தை அளித்தது. தமிழ் மக்கள் சுயமரியாதையுடன் வாழ வழி செய்யும் சுயாட்சி அரசை அமைக்கும் தன்னோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இந்த ஜனநாயக வழிகளை பயன்படுத்தி நடவடிக்கையெடுத்தார்.

அது சுதந்திர இலங்கையில் தமிழர் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கையாண்ட நான்காவது உத்தி. முதலாவது ஒத்துழைப்பு ஜி.ஜி.பொன்னம்பலத்துடன் இணைந்திருந்த காலத்தில், அவர் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்து தமிழர் பிரதேசத்தைப் பாதுகாக்கலாம் என்று டி.எஸ்.சேனநாயக்கா அரசுடன் ஒத்துழைத்த காலத்தில் தமிழரின் நிலப்பறிப்பு தீவிரமடைந்தது. மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது.

இரண்டாவது சாத்வீகப் போராட்டம் தமிழரின் உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு சுயாட்சியைப் பெற்றுக் கொடுக்க இந்த உத்தியை தந்தை செல்வா கையாண்டார்.

1956 யூன் 05 ஆம் திகதி காலிமுகத்திடலில் நடத்திய சாத்வீகப் போராட்டமே இதுவாகும். பாரத தேசத்திற்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்க மகாத்மாகாந்தி சாத்வீக வழியில் போராடினார். இச் சத்தியாக்கிரகத்தை தந்தை செல்வா மேற்கொண்டார்.

அதன் மகிமையை உணராத சிங்கள அரசும் சிங்களக் குண்டர்களும் பலாத்காரத்தை மேற்கொண்டு சத்தியாக்கிரகிகளை அடித்து வெருட்டினார்கள். திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இரத்தக் கறையுடன் நாடாளுமன்றம் சென்று இந்த அடாவடித்தனத்தை எடுத்துக் கூறினார். 1961 இல் வடக்குக் கிழக்குத் தமிழர்களை அணி திரட்டி மாபெரும் சாத்வீகப் போராட்டத்தை நடத்தினர். அந்த சத்தியாக்கிரகப் போராட்டம் சிங்கள இராணுவத்தால் முறியடிக்கப்பட்டது.

தந்தை செல்வாவின் சாத்வீகப் போராட்டமும் வெற்றியளிக்கவில்லை. நாலாவது உத்தி– அரசாங்கத்தை ஆக்குவதும் அழிப்பதும். 1960 மாச்சில் தந்தை செல்வா, டட்லி சேனநாயக்க அரசாங்கத்தைக் கவிழ்த்தார். 1960 யூலையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் உருவாக உதவினார். உதவிய வரை ஸ்ரீமாவோ அம்மையார் உதறித் தள்ளினார். இதுவும் தந்தை செல்வாவிற்கு ஏமாற்றம்.

ஐந்தாவது உத்தி அரசாங்கத்தில் பங்கு கொண்டமை. 1965ல் ஐ.தே.கட்சி தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு தந்தை செல்வா ஆதரவளித்தார் பின்வரும் கோரிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் பங்காளியாகச் சேர்ந்த தந்தை செல்வா மூன்று ஆண்டுகளின் பின் டட்லியும் ஏமாற்றி விட்டார். ஐந்தாவது உத்தியிலும் தந்தை செல்வா தோல்வி கண்டார்.

ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டி அரசியல் அடிப்படையில் அதிகாரப் பகிர்வுடனான ஒருசுயாட்சியைப் பெறுவதற்கு 30 வருடமாகப் அகிம்ஸை வழியில் போராடிய தந்தை செல்வாவுக்கு சிங்கள ஆட்சியாளரால் ஏமாற்றப்பட்ட பின்னர் மாற்று வழியாக தமிழீழக் கோரிக்கையை வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையையும் ஒரு தேசிய இனத்துக்கான அடிப்படை உரிமைகளும் சிங்கள அரசாங்கங்களால் மறுக்கப்பட்டதால் தந்தை செல்வா தமிழீழக் கோரிக்கையை முன்னெடுத்தார். அதற்கான ஆயுதப் போராட்டம் தற்போது தோல்வியடைந்த நிலையில், மீண்டும் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பம் சிங்கள அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

போர் வெற்றியின் மமதையில் அரசு தட்டிக் கழிக்குமாயின், ஐக்கிய நாடுகள் சபை மூலம் தமிழீழம் மலரும் என்பது உறுதி.

அன்னார் தாம் காலமாகும் முன் தமது 79 ஆவது வயதில் “கடவுள் தான் இனி தமிழ் பேசும் மக்களைக் காப்பாற்ற வேண்டும்” என்றார். அது இன்றும் தொடர்கதையாக செல்கின்றது.



# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் சாத்தியமா?



வி.எஸ்.சிவகரன்

குறைந்த பட்சம் ஐக்கியமாகக் கூடப் போக முடியாத தமிழர் தரப்பில் தமிழ்ப் பொது வேட்பாளர் எனும் வாதம் ஏற்புடையதாக மாறுமா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவான 2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலையை விடவும் மிகவும் பலவீனமான நிலையிலேதான் தமிழர்களின் அரசியல் இருப்புக் காணப்படுகிறது. வடகிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய எந்தக் கட்சியும் தற்போது நிலையான அதிகூடிய வாக்கு வங்கி அற்றவர்களே. வலிமையான வாக்குக் கவர்ச்சியுள்ள (கரிஸ்மா) தலைவர் எவரும் இருக்கின்றார்கள் என்று தெரியவில்லை.

### போட்டடித்த விக்கி

வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வர் நீதியரசர் விக்கினேஸ்வரனுக்கு ஒரு பெரும் வாக்குக் கவர்ச்சி இருந்தது. அதை அவர் வலிமையான – நெஞ்சுக்கு நீதியான – செயற்பாட்டின் மூலம் தக்க வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதை மிகக் குறுகிய காலத்திலேயே அவராகவே காலாவதியாக்கிவிட்டார். அவருடைய முன்னுக்குப் பின் முரணான செயலற்ற வார்த்தைகளே அவரை தமிழ்த் தேசிய இருப்பு நிலை அரசியலின் நோக்கு நிலையில் இருந்து அன்னியப்படுத்திவிட்டது. காரணம் அவர் தமிழ்த்தேசியம் பற்றிய பூரண சித்தாந்தத் தெளிவு அற்றவராகவும், கோட்பாட்டு அரசியலைப் புரியாதவராகவும், வெறும் தேர்தல் அரசியலுக்காக உயர்ந்த பதவியில் இருந்தவர் எனும் ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தனால் வலிந்து அழைத்து வரப்பட்டவர். வடகிழக்கு அரசியலுக்கு அவர் ஒரு வழிப்போக்கனே. அதனாலே அவரது சாயம் விரைவாக வெளுத்து விட்டது.

### சம்பந்தனின் அரசியல்

இதற்கு அப்பால் சம்பந்தன் தமது மேட்டிமைவாத அதிகாரத்தால் கடந்த சில ஆண்டுகள் தமிழர் அரசியலை நகர்த்திச் சென்றார். நீண்ட காலமாக யுத்தப் பிடிக்குள் சிக்குண்டு இருந்ததால் சுயமாக சிந்திக்க முடியாத வாழ்வியல் போராட்டத்தால் 2015 ஆம் ஆண்டு வரை இந்த அணியை தமிழர்களில் பெரும்பான்மையினர் ஆதரித்தனர். அதற்குப்பின் இவர்கள் எதிர்க் கட்சிக்குள் ஆளுங்கட்சியாக இருந்தார்கள். அதனால் தமிழ் மக்கள் இவர்கள் மீது நம்பிக்கையிழக்கத் தொடங்கினார்கள். அதன் விளைவு தற்போது யாவரும் அறிந்ததே.

### பாவ மன்னிப்புப் பெற்ற ஆயுதக் குழுக்கள்

அதேபோல் ஆயுத குழுக்களில் இருந்து புலிகளின் பாவமன்னிப்பால் அரசியல் ஆதாயம் பெற்றவர்கள் தமிழ்மக்கள் மத்தியில் பேரபிமானம் பெற்றவர்கள் அல்லர். இவர்களின் கடந்த கால தமிழ்த்தேசிய விரோதங்களை எவரும் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள். காயங்கள் ஆறினாலும் அது ஏற்படுத்திய ரணங்களை மறந்துவிட முடியுமா? இவர்கள் அவ்வப்போது வீர தீரப் பேச்சுக்களை அடித்து விடுவார்கள். ஆனால் செயல் வேறு விதமாக இருக்கும் என்பது சாமானிய வாக்காளனுக்கும் புரிந்த விடயம். உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வட்டாரப் பங்கீட்டு விவகாரத்தில் முரண்பட்டு தனி அணி ஆனார்கள். ஆனால் பெரிய அளவில் அவர்களால் நடைமுறை அரசியலில் சோபிக்க முடியவில்லை. தேர்தல் நடந்திருந்தால் இவர்கள் வண்டவாளம் தெரிந்திருக்கும்

தோற்றுப் போன அணியின் பிளவு. முரண்பட்டு பிளவு பட்டவர்களின் கூட்டு எப்படி முன்னகர முடியும்? ஆகவே அது ஆரம்பித்த இடத்திலேயே தேங்கி நிக்கிறது.

வரும் நாடாளுமன்றத் தேர்தலைக் கூட இவர்கள் தனியாக எதிர்கொள்ளக்கூடிய திராணியில் இல்லை. ஒற்றுமை அல்லது ஐக்கியம் எனும் தேர்தல் கால வாசகங்களுடன் அவர்கள் மீண்டும் வீட்டுச் சின்னத்தில் சவாரி செய்ய எண்ணுவதாகவே தெரிகிறது. இல்லாவிட்டால் தமது அணியை கிராமந்தோறும் வலிமையாகக் கட்டமைக்காமல் – ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணிக்கு ஆள் சேர்க்காமல் – தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் போது தமிழரசுக் கட்சிக்கு எதிராக எவ்விதமான குற்றச்சாட்டை முன்வைத்தார்களோ அதே வேலையைத் தான் இந்தக் கூட்டணியிலும் செய்கிறார்கள். தத்தமது கட்சி வளர்ச்சியிலே ஆர்வமாக இருக்கிறார்கள். அவ்விதமானவர்களுக்கு ஏன் கூட்டு? தேர்தலில் வெல்வதற்கு

தொடர்ச்சி ▼

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் சாத்தியமா?

தொடர்ச்சி ▲

மட்டுமா? இதை தான் கடந்த பல ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து செய்தார்களே...? அப்போது இவர்கள் உருப்படியாகச் சாதித்தது என்ன எனும் கேள்வியை பலர் எழுப்புகிறார்கள். எல்லாம் தேர்தல் கால ஆதாயச்சூதாடிகளே.

### சொப்பன சுந்தரியின் நிலையில் தமிழரசு

தமிழ்த்தேசியம் எனும் ஒற்றைச் சொல்லாடல் மூலம் வாக்காளரை உணர்ச்சி வசப்படுத்தி, ஏமாற்றி, பதவிச் சுகத்தோடு காலத்தை நகர்த்துகிறார்கள். ஆகவே மீண்டும் நோகாமல் வீட்டோடு கூட்டுக்குப் போக பெரு விருப்போடு காத்திருந்தார்கள். ஆனால் தமிழரசுக் கட்சி உள்கட்சி தேர்தலால் நீதிமன்றில் நிழல் ஆடுகிறது. அதனால் தமிழரசில் தற்போது யாருடன் பேசுவது என்று கூட தெரியாமல் உள்ளது. எனவே தமிழரசுக்கட்சியே சொப்பன சுந்தரியின் நிலையில் இருப்பதால் தடுமாறுகிறார்கள்.

திரிசங்கு நிலையில் தமிழரசுக் கட்சியும் உள்ளதால் அது வழக்குக்களில் இருந்து மீண்டாலும், அஜ்கட்சி ஐக்கியத்துடன் பயணிக்குமா அல்லது அதற்கு தலைமைத்துவப் போட்டியாளர்கள், புலம்பெயர்ந்த நிதியுடலாளர்கள், உள்ளூர் ஊடக முதலாளிகள் போன்றோர் வழிவிடுவார்களா, இருவரது அடிப்பொடிகளும் இணைவரா என்பவை எல்லாம் மில்லியன் டொலர் கேள்விகள்.

பிரிந்த தொண்டர்களின் இணைவு என்பது இலகுவில் நிகழ்ந்து விடக்கூடிய விடயமும் அல்ல. தொண்டர்கள் இதயத்தால் இணையாமல், கட்சிகளோ, அமைப்புக்களோ, குடும்பங்களோ உருப்பட்டன என்று வரலாறு இல்லை. விதி வலியது.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழரசுக் கட்சி என்ன முடிவு எடுக்கப் போகிறது, அங்கு முடிவு எடுப்பது யார் என்ற கேள்விகள் உண்டு. ஆகவே தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் பெரிய ஆர்வம் காட்டுமா எனத் தெரியவில்லை. அதற்கான வாய்ப்புக்கள் குறைவு என்று தான் தோன்றுகிறது.

### முன்னரும் முயன்ற சிவில் சமூகத்தினர்

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் சிவில் சமூகம் எனக் கூறிக் கொள்ளும் யாழில் உள்ள சிலர் இவ்விதமான முயற்சி எடுத்தனர். அது பயனளிக்கவில்லை.

தற்போதைய சூழ்நிலையிலும் தமிழ்ப் பொது வேட்பாளர் எனும் கருத்துருவாக்கத்தை ஓர் ஊடக முதலாளியும் முன்னாள் ஆயுதக் குழுக் கட்சிகள் சிலவுமே வெளிப்படையாக ஆதரிக்கின்றனர். இதன் பின்னணி என்னவென்று புரியவில்லை. இவர்களால் இதைப் பொதுக் கருத்தாக மாற்ற முடியுமா எனும் கேள்வியும் எழாமலில்லை.

### பொது வேட்பாளர் எனின் அவர் யார் எனும் சிக்கல்

வடகிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க்கட்சிகள் எவையுமே வலிமையாகவும் ஐக்கியமாகவும் இல்லை. ஐக்கியத்திற்கு தயாராகவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே வாக்கு பலமிழந்த நிலையில் வேட்பாளரை நிறுத்துவது சாதகமான நிலையைத் தோற்றுவிக்குமா? அப்படியானால் யார் அந்த பொது வேட்பாளர்? வடக்கா? கிழக்கா? கொழும்பா? தற்போதைய தமிழ்க்கட்சிகளில் உள்ள எவரை நிறுத்தினாலும் ஒருவரை ஒருவர் ஆதரிக்க மாட்டார்கள். எந்தக் கட்சிச் சின்னத்தைப் பயன்படுத்துவது?

இந்த அடிப்படைக் கேள்விகளுடன் வேட்பாளர் தேடுவதே பெரிய சவால். அப்படியே வேட்பாளர் தேடினாலும் எவ்விதமான கோட்பாட்டை நோக்கிப் பரப்புரை செய்வது? அதற்கு பணம் செலவழிப்பது யார்? தமிழ்க்கட்சிகளின் பல தலைவர்கள் தங்கள் தொண்டர்களுக்கு பிளேன் ரீ கூட வாங்கிக் கொடுக்க மாட்டார்கள் எனும் விமர்சனம் உண்டு. ஆனால் அவர்களிடம் பணம் உண்டு.

இவற்றை எல்லாம் கடந்தாலும், தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பார்களா? தமிழ்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் வாக்காளனுக்குமே நீண்ட இடை வெளி உண்டு. கண்ணை மூடிக் கொண்டு நம்பும் அளவிற்கு எந்த தலைவரும் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தெரியவில்லை. பொய்யின் நிழல்படாத உண்மை இது.

### 24 கரட் அசல் தங்கமும் பிற தமிழ்ப் பிரமுகர்களும்

அரசியலில் தாங்கள் மட்டும் தான் அசல் இருபத்தி நான்கு கரட் என மார்தட்டிக் கொள்ளும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலை நிச்சயமாகப் புறக்கணிப்பார்கள் என்பது வெள்ளிடைமலை.

இதை விட, தற்போது அரச ஆதரவில் உள்ள டக்ளஸ் தேவானந்தா, சந்திரகாந்தன் (பிள்ளையான்), வியாளேந்திரன், அங்கஜன் இராமநாதன், அதே போல் ரிஷாட் பதியுதீன், காதர் மஸ்தான் போன்றவர்களிடமும் கணிசமான தமிழ் வாக்குகள் உள்ளன. மேலும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகுமார், கருணா போன்றவர்களிடமும் சில ஆயிரம் தமிழ் வாக்குகள் உண்டு. இவர்கள் யாவரும் யாரோ ஒரு கொழும்பு மைய வேட்பாளரை ஆதரிப்பார்கள். இதில் படித்த வாக்காளரும் சாதாரண வாக்காளரும் வெவ்வேறு விதமான தீர்மானம் எடுப்பதற்கும் வாய்ப்பு உண்டு.

தற்போதைய சூழ்நிலையில் அம்பாறை, திருகோணமலை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கூடப் பெறக்கூடிய நிலையில் தமிழ்த்தேசிய கட்சிகள் இல்லை. இந்த மாவட்டங்களில் தமிழ் மக்களின் திரட்சியை ஏற்படுத்த இந்தக் கட்சிகள் இதுவரை என்ன செய்தன? இவர்களிடம் கோசங்களுக்கு அப்பால், அடைவு இலட்சியம் என்ன? ஆகவே இவ்விதமான பலவீனமான நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் போது போதிய ஆதரவு கிடைக்குமா? அவ்வாறு கிடைக்காவிட்டால் தமிழ்மக்களின் எதிர்கால அரசியல் இருப்பு நிலை என்ன? சரணாகதி நிலையா? பேரம் பேசும் நிலையை அது இல்லாமல் செய்து விடாதா? குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி தேர்த

தொடர்ச்சி ▼

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் சாத்தியமா?

தொடர்ச்சி ▲

லில் எடுத்த 1,73,934 வாக்குகள் கூட இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளரால் எடுக்க முடியுமா எனும் கேள்வியும் இல்லாமல் இல்லை.

அது ஒரு காலம். இது வேறு காலம். காலத்திற்கு ஏற்றவாறு மக்களின் – வாக்காளனின் – மனோநிலை மாற்றத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். “வினை வலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்“ என்றான் வள்ளுவன். எந்த வலியும் எமது அரசியல் வாதிகளுக்குப் புரிவது இல்லை.

### ஜனநாயகத்தை விடவும் வலிமை மிக்கவையான பணநாயகம், மதுநாயகம்

தற்போதைய தேர்தலில் ஜனநாயகத்தை விட பணநாயகம், மதுநாயகம், நலனியல் நாயகம் எனப் பல நாயகங்கள் வேலை செய்கின்றன. இதில் தூதரகங்களின் பங்கும் உண்டு. குறிப்பாக இந்திய தூதரகம் தமிழ்க்கட்சிகளின் தீர்மானத்தில் செல்வாக்குச் செலுத்தும். அதில் பணநாயகமும் உண்டு. தற்போதையை ஜனாதிபதி தெரிவில் அந்த தூதரகம் டலசஸ்‘க்கு வாக்களிக்கும்படி கூறி, அந்தக்கதை பட்டவர்த்தனமாக வெளியே தெரிந்து, விவகாரம் பெரும் சங்கடத்திற்குள்ளாகியது.

தலைவர்களே திரைமறைவு பேரம் பேசி பணம் மற்றும் சலுகைகள் பெறும்போது, வாக்காளர்கள் மட்டும் நேர்மையாக இருக்க வேண்டும் என்று தலைவர்கள் யோசிப்பது நியாயமாகுமா? இதில் பல தலைவர்களுக்கு நல்ல கொண்டாட்டம். மக்களுக்கோ எப்போதும் திண்டாட்டம்தான்.

ஆகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் முதலில் தங்களை வலிமைப் படுத்த வேண்டும். கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய நிலையில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களைத் தாங்களே உணராதமை வேடிக்கையானது. எனவே மக்கள் மத்தியில் பொது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எப்போதுமே தடுமாறுபவர்கே தலைவர்களே, பொது மக்கள் அல்லர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். தமிழ்த் தேசியத் தரப்பு பலவீனமான நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் பற்றி சிந்திப்பது “மூஞ்சூறு தான் போக வழியைக் காணவில்லை, விளக்குமாற்றைத் தூக்கிய கதைக்கு” ஒப்பானது.



# தனியார் மருந்தக உரிமையாளர் சங்க கிரிக்கெட் தொடரில் சம்பினானது கண்டி




‘ஹேமாஸ் பார்மசிட்டிகல்ஸ்’ அனுசரணையில் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம் நடத்திய வருடாந்த கிரிக்கெட் தொடர் அண்மையில் கொழும்பு ஹவ்லொக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்தத் தொடரியில் நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள அணிகள் பங்கு பற்றியிருந்தன.

இதன் இறுதியாட்டத்தில், கண்டி – இரத்தினபுரி மாவட்ட அணிகள் போட்டியிட்டன. இதில், கண்டி மாவட்ட அணி சம்பியனானது.




# 2023 இல் 40.3 பில்லியன் ரூபாய் லாபம் ஈட்டிய இலங்கை வங்கி

உலகமும் இலங்கையும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலையிலும், இலங்கை வங்கியானது 2023 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முந்தைய இலாபமாக 40.3 பில்லியன் ரூபாயை ஈட்டியுள்ளது.

இது திரவத்தன்மை, மூலதனம், செயற்திறன், இலாபம் மற்றும் சொத்துத் தரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் இலங்கை வங்கி வெளிப்படுத்தியுள்ள வலுவானதும் நிலையானதுமான செயற்திறனைக் காட்டி நிற்கிறது.

தொழிற்துறைப் போட்டியும் சவாலும் மிகுந்த சூழலிலும் இலங்கை வங்கியால் இத்தகையவொரு சாதனையை நிகழ்த்த முடிந்ததெனின் அதற்கு அதன் தொழில் நிபுணத்துவமும் அனுபவமும் வாய்ந்த ஆளணியே காரணம் என குறிப்பிடப்படுகிறது.

இந்த ஆளணியே நலிவடைந்து சென்ற வணிகத் துறைகளை வியாபாரப் புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு உத்திகள் மூலம் இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றியது. இந்தச் சாதனையானது, வங்கித் துறையில் உள்ள சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி நவீன தொழில்நுட்பங்களைக் கைக்கொள்வதன் மூலம் சிறந்த நிதிசார் அடைவுகளை தொடர்ச்சியாகப் பேணியவாறே சவாலான காலங்களிலும் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் வங்கியின் ஆற்றலையும் போராட்ட குணத்தையும் பறைசாற்றுகிறது.

இலங்கை வங்கியின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான றொனால்ட் சி பெரேரா இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

“கடந்த சில வருடங்களில் ஏற்பட்ட அனைத்துச் சவால்களையும் வங்கி வெற்றிகரமாகச் சமாளித்துள்ளது. மூலோபாய ரீதியாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் வங்கியின் வியாபாரத் தொடர்ச்சி பேணப்பட்டதோடு எங்களின் பெறுமதியான பங்குதாரர்களுக்கு தடையற்ற சேவைகளையும் ஆற்ற முடிந்தது.

வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறையை நிர்வகிப்பது ஒரு சவாலான பணியாகும். ஆயினும் “தேசத்தின் வங்கியாளரான” நாங்கள் எப்போதும் தொலைநோக்குப் பார்வையுடன் செயற்பட்டு பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்வு




என்பவற்றின் உயிர்ப்புக்கு தடையில்லா எரிசக்தி வழங்கல் எவ்வளவு முக்கியம் என்பதை அடையாளம் கண்டோம்.

ஆகையால் எரிசக்தி மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான வெளிநாட்டு நாணயத் தேவைகளை எளிதாக்க வங்கி தனது அனைத்து முயற்சிகளையும் எடுத்தது. இருப்பினும், வங்கியின் நீண்டகால மூலோபாய முன்னுரிமைகளில் சமரசம் செய்யாமல், நிதி நிலையை வலுப்படுத்துவதை மையமாகக் கொண்டு குறுகிய கால உத்திகள் கவனமாக நிர்வகிக்கப்பட்டன.” – என்றார்.

# ‘ஆண்டின் பிரபலமான தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்’ விருதை டயலொக் பெற்றது

இலங்கையின் முதல்தர தொலைத் தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி., 'SLIM-KANTAR மக்கள் விருதுகள் 2024” தெரிவில் தொடர்ந்து 13 ஆவது வருடமாக “ஆண்டின் சிறந்த தொலைத் தொடர்பு வர்த்தக நாமம்“ விருதிற்கு இலங்கை வாடிக்கையாளர்களால் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் சந்தைப்படுத்தலுக்கான தேசிய நிறுவனமான Sri Lanka Institute of Marketing (SLIM) மூலம் நடத்தப்படுகின்ற மேற்படி விருதுகள், இலங்கை மக்களின் மனதை வென்ற வர்த்தக நாமங்களை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு நிகழ்வாகும்.

இலங்கை நுகர்வோரின் வாக்குகளின் மூலம் அடையப்பெற்றுள்ள இந்த வெற்றியானது, சேவையில் சிறந்து விளங்குவதற்கான டயலொக்கின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு, புத்தாக்கம் மற்றும் நாட்டின் டிஜிட்டல் மாற்றத்தில் டயலொக் வழங்கும் பங்களிப்பிற்கு ஒரு சான்றாக அமைந்துள்ளது என கருதப்படுகின்றது.

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. குழுமத்தின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி லசந்த தெவரப்பெரும இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

“தொடர்ச்சியாக 13 ஆவது வருடமாக ‘ஆண்டின் சிறந்த தொலைத்தொடர்பு வர்த்தக நாமமாக’ டயலொக் அங்கீகரிக்கப்பட்டுள்ளதையிட்டு நாம் பெருமையடைகிறோம்.

இலங்கையர்களின் வாழ்வை வலுவூட்டுவதற்கு எப்போதும் அயராது பாடுபடும் ஒரு நிறுவனம் என்ற வகையில், அந்த அயராத உழைப்பின் பிரதிபலிப்பை இலங்கையின் நுகர்வோர் மத்தியில் நாம் காணும் போது உண்மையிலேயே மகிழ்ச்சியாக உள்ளது.

இந்த விருதானது, எமது வாடிக்கையாளர்களுக்கான நமது “அசைக்க முடியாத அர்ப்பணிப்பு” மற்றும் “எதிர்காலத்தை வழங்குவதற்கான நமது தொடர்ச்சியான முயற்சிகளுக்கான அங்கீகாரம்” என கருத முடியும்.

“எதிர்காலம் இன்றே” எனும் நமது வர்த்தக நாம தொனிப் பொருளுக்கமைய வாடிக்கையாளர்களின் அபிமான தொலைத்தொடர்பு வழங்குனராக டயலொக்கை தொடர்ந்தும் தேர்ந்தெடுப்பதில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்காக எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம்.” – என்றார்.




# GIPA உடன் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கோர்ப்பரேஷன் ஜெனரல் லிமிடெட் வரலாற்று சாதனை படைத்துள்ளது




பொதுக் காப்புறுதித் துறையைச் சேர்ந்த விற்பனை நிபுணர்களின் சாதனைகளை கௌரவிக்கும் வகையில் உலகின் முதலாவது பிரத்தியேகமான கௌரவிப்புத் திட்டமான General Insurance Pinnacle Achiever (GIPA) விருதை ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) அறிமுகம் செய்துள்ளது.

பொதுக் காப்புறுதி விற்பனைத்திறனை கௌரவிக்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளதுடன், விற்பனைச் சிறப்பில் சர்வதேச நியமங்களை ஏற்படுத்துவதற்கு வழி கோலுவதாகவும் அமைந்துள்ளது.

60 வருட கால உறுதியான சந்தைப் பிரசன்னத்தைக் கொண்டாடும் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஜெனரல் லிமிடெட், தொழிற்துறையில் காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவையை இனங்கண்டிருந்தது.

அத்துடன், பொதுக் காப்புறுதி விற்பனை நிபுணர்களின் வெற்றிகரமான செயற்பாடு மற்றும் அர்ப்பணிப்பை கொண்டாடும் சர்வதேச, சுயாதீன கட்டமைப்பு ஒன்று காணப்படாமை, அவர்களின் அபிவிருத்தியை ஊக்குவிக்காமை மற்றும் தொழிற்துறை மட்டத்தில் பொதுக் காப்புறுதி விற்பனை நியமங்களை நிறுவுவதில் காணப்படும் இடைவெளியையும் இனங்கண்டிருந்தது.

ஆயுள் காப்புறுதித் துறை மில்லியன் டொலர் வட்ட மேசை (MDRT) மற்றும் ஆயுள் காப்புறுதி சந்தைப்படுத்தல் மற்றும் ஆய்வு சம்மேளனத்தினால் (LIMRA) அங்கிகரிக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றை கொண்டிருந்த போதிலும், பொதுக் காப்புறுதித் துறையைச் சேர்ந்த நிபுணர்களுக்கு அவற்றுக்கு நிகரான எவ்விதமான திட்டங்களும் இல்லை.

மேலும், பல பல்தேசிய காப்புறுதி நிறுவனங்கள் பெருவாரியான நிகழ்வுகளில் உள்ளக விற்பனை விருதுகள் வழங்கும் திட்டங்களை முன்னெடுக்கின்ற போதிலும், அவை எதுவும் பொதுக் காப்புறுதி விற்பனையாளர்களின் ஆற்றல்களை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்லக்கூடிய வகையில் கட்டியெழுப்புவதாக அமைந்திருக்கவில்லை.

இந்த சமநிலையின்மையை சீராக்குவதில் GIPA கவனம் செலுத்துகின்றது. முக்கியத்துவமான படியை முன்னெடுத்து, ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஜெனரல் லிமிடெட், முதலாவது GIPA நடவடிக்கையை வடிவமைத்திருந்ததுடன், பொதுக் காப்புறுதி விற்பனைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு உரிய கௌரவிப்பை பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளதுடன், வியாபார வெற்றிகரமான செயற்பாடு மற்றும் தொழிற்துறையின் நிலைபேறாண்மைக்கு மிகவும் நிலையான பங்களிப்பை வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

சுயாதீன வர்த்தக நாமமொன்றை உருவாக்கி, GIPA நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, பொதுக் காப்புறுதி விற்பனை அதிகாரிகளிடையே பரந்தளவு சர்வதேச சந்தைகளில் உச்ச வினைத்திறனை ஊக்குவிப்பதாக அமைந்திருக்கும்.

ஒட்டுமொத்த காப்புறுதி அளவுக்காக கௌரவிப்பு (Overall Volume Recognition), புதிய வியாபார பங்களிப்பு (New Business Contribution), வியாபார தக்க வைப்பு வெற்றிக்கான கௌரவிப்பு (Recognition to Business Retention Success), வருடாந்த வளர்ச்சி (Year on Year Growth), வியாபார பிரிவில் நிலைபேறாண்மையின் நிலை (Level of Sustainability in the Business Portfolio) மற்றும் நிறுவனசார் மற்றும் தேசிய தரப்படுத்தலில் நிலை (Position in the Organisational and National Ranking) போன்றவற்றில் சர்வதேச பொதுகாப்புறுதி விற்பனை அதிகாரிகளின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் ஆறு அம்சங்களை GIPA கொண்டுள்ளது.

பொதுக் காப்புறுதித் துறையை கட்டியெழுப்பும் வகையில் பல்வேறு விற்பனை திறன்களையும் ஒன்றிணைக்கப்பட்ட அம்சங்களிலும் இந்த நிகழ்ச்சித் திட்டம் கவனம் செலுத்துகின்றது. உலகளாவிய ரீதியில் பொதுகாப்புறுதித் துறையினுள் முறையான வெளிப்படுத்தல்கள், தவிர்க்க முடியாத சிறப்புகள் போன்றவற்றை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகின்றது.

கட்டங்களாக GIPA கௌரவிப்பு வெளியிடப்படும். ஆரம்பத்தில், ‘Achiever’, ‘Star’ மற்றும் ‘Legend’ ஆகிய நிலைகளில் சிறந்த செயற்பாடுகள் கௌரவிக்கப்படும். அதனைத் தொடர்ந்து திறன் கட்டியெழுப்பல் வாய்ப்புகள் மற்றும் தொழிற்துறை புத்தாக்கங்களை அணுகுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல் போன்றன அடங்கியிருக்கும்.

மூலோபாய வழிமுறையினூடாக விற்பனை சாதனைகளை கௌரவிப்பதனூடாக ஊக்கமளிப்பு, தொழில்நிலை முன்னேற்றம் மற்றும் தொழிற்துறை நியமங்கள் மேம்படும் எனும் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஜெனரல் லிமிடெட்டின் நம்பிக்கையை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

காப்புறுதித் துறையில் சர்வதேச மட்டத்தில் சிறப்பாக திகழ்வதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாகவும் இது அமைந்துள்ளது. இந்த இலக்கை எய்துவதற்கு, இலங்கையின் பரந்த பொதுக் காப்புறுதி தொழிற்துறையுடன் இணைந்து செயலாற்றி GIPA இன் ஆற்றலை சர்வதேச பங்காளர்களுடன் பகிர்வதற்கு ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஜெனரல் லிமிடெட் எதிர்பார்க்கின்றது.

GIPA இன் வெற்றிக்கு பிரதான காரணமாக GIPA சம்மேளனம் ஸ்தாபிக்கப்பட்டமை அமைந்துள்ளது. இந்த சுயாதீன அமைப்பினூடாக, மதிப்பாய்வு நியமங்கள் நிர்ணயிப்பது மற்றும் சர்வதேச சந்தைகளுக்கேற்ப நிகழ்ச்சியை முன்னெடுப்பதை உறுதி செய்வது போன்றன மேற்கொள்ளப்படுகின்றன.

சர்வதேச பொதுகாப்புறுதி தலைமைத்துவத்துடன் புஜீயு இன் சர்வதேச வியாபிப்புக்கு சுயாதீனமான GIPA சம்மேளனத்தின் நிறுவுகையில் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் கவனம் செலுத்துகின்றது. மதிப்பாய்வு நியமங்களில் நாட்டுக்குரிய மாற்றங்களை மேற்கொள்வதில் இந்த சம்மேளனம் வசதிகளை வழங்கும் என்பதுடன், சர்வதேச நியமங்களையும் பேணும். பல்தேசிய சம்மேளனம் ஸ்தாபிக்கப்பட்டதும், துரித சர்வதேச விரிவாக்கத்துக்கு GIPA எதிர்பார்ப்பதுடன், சர்வதேச பொது காப்புறுதி தொழிற்துறையில் காணப்படும் புகழ்பெற்ற நாமங்களின் ஆதரவையும் பெற்றுக் கொள்ளும்.

GIPA இன் ஆரம்ப கட்டமாக, ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட், 2023 ஆம் ஆண்டில் உள்ளக மட்டத்தில் விருது வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்திருந்தது. அதனூடாக சிறந்த 20 ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் செயற்பாட்டாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.




# பெண்களை வலுவூட்டும் ‘GROW’ திட்டம் யூனியன் அஷ்யூரன்ஸ் அறிமுகம் செய்தது




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பெண்களுக்கு வலுவூட்டும் திட்டமான “GROW” ஐ அறிமுகம் செய்தது.

இந்த அறிமுக நிகழ்வில் நிறுவனத்தின் பெண் அணி அங்கத்தவர்கள், கூட்டாண்மை முகாமைத்துவ அணியின் பிரதம செயற்பாட்டாளர்கள், நிறைவேற்றுக் குழு மற்றும் விசேட விருந்தினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் “GROW” கொள்கை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினுள் பெண் அணி அங்கத்தவர்களுக்கு உள்ளடக்கமான மற்றும் ஆதரவான சூழலை கட்டியெழுப்பும் வகையில் வடிவமைக்கப்பட்ட திட்டமாகும்.

வளர்ச்சி மற்றும் விருத்தி (Growth and Development), கௌரவிப்பு (Recognition), வாய்ப்புகள் (Opportunities) மற்றும் நலன் (Well-being) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்த புசுமுறு, பெண் அணி அங்கத்தவர்களுக்கு நிபுணத்துவ ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் வலுவூட்டுவம் வகையில் அமைந்துள்ளது.

பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் போன்ற கொள்கைகளுக்கு உறுதியான அர்ப்பணிப்பைக் கொண்ட யூனியன் அஷ்யூரன்ஸ், தனது பணிக்குழாமில் 51 வீதம் பெண் பிரதிநிதித்துவத்தை பெருமையுடன் பேணி வருகின்றது.

“GROW” ஊடாக இந்த நியமங்களை மேலும் மேம்படுத்துவதற்கு நிறுவனம் எதிர்பார்க்கின்றது. குறிப்பாக முகாமைத்துவ நிலைகள், கூட்டாண்மை தலைமைத்துவம் மற்றும் பாரம்பரியமற்ற பதவி நிலைகள் போன்றவற்றில் பெண்களின் பிரசன்னத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளினூடாக இதை எய்த எதிர்பார்த்துள்ளது.

இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக, சிந்தனையைத் தூண்டும் குழுநிலைக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், தொழிற்துறையின் புகழ்பெற்றவர்களான மிபாஸ் அஹமட் (பிரதம மக்கள் அதிகாரி, பார்தி எயார்டெல் ஸ்ரீலங்கா), கவி ராஜபக்ச (பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி, சன்ஷைன் கன்சியுமர் லங்கா லிமிடெட்), குமுது முனசிங்க (உதவி உப தலைவர், கூட்டாண்மை தொடர்பாடல்கள் தலைமை அதிகாரி, குழு தலைவர் – பன்முகப்படுத்தல் மற்றும் உள்ளடக்கம், செயற்பாடுகள் தலைமை அதிகாரி – சமூக தொழில்முயற்சியாண்மை, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ்), மற்றும் வத்சலா அளுத்கெதர (பிரதம பங்காண்மை விநியோக அதிகாரி, யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி) ஆகியோர் அடங்கியிருந்தனர். அமர்வின் நெறியாள்கை செய்பவராக மஹேன் குணரட்ன (பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி, யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி) செயலாற்றியிருந்ததுடன், தலைமைத்துவத்தில் பெண்கள், பணி–வாழ்க்கை சமநிலை, பெண்களின் வலுவூட்டல், தனிநபர் வர்த்தக நாமமிடல், மற்றும் ஆண்களின் தங்கியிருக்கும் தன்மை போன்ற முக்கியமான தலைப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

“GROW” அறிமுகம் தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் ஆனிஃவ் கருத்துத் தெரிவிக்கையில்,

“GROW” திட்டத்தை அறிமுகம் செய்வதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். பெண்களுக்கு வலுவூட்டுவது மற்றும் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்க கலாசாரத்தை கட்டியெழுப்புவதில் காண்பிக்கும் எமது ஒப்பற்ற அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது.

பெண் அணி அங்கத்தவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களையும் வாய்ப்புகளையும் எதிர்கொள்வதற்கு பரிபூரண வழிமுறையை பின்பற்றுவதாக “GROW” அமைந்துள்ளது. யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பெண் அணி அங்கத்தவர்களுக்கு பல்வேறு வளர்ச்சி மற்றும் விருத்திக்கான வாய்ப்புகள், கௌரவிப்பு, வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் நலன் பேணல் போன்றவற்றுக்கு முன்னுரிமையளிக்கின்றது. GROW ஊடாக, பெண்களுக்கு தமது தனிப்பட்ட மற்றும் நிபுணத்துவ வாழ்வில் உயர்ந்த ஸ்தானத்துக்கு செல்வதற்கு அவசியமான வளங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம்.–” என்றார்.